Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

Regd. No. 2975.

ஸ்ரீ:

SRI RAMANUJAN

Editor: P. B. ANNANGARACHARYA, L. KANCHEEPURAM.

ஸ்ரீராமாநுஜன் 220

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ. P. B. அண்ணங்கராசாரியர்.

வருடச் சந்தா ரூ. 5 ஜீவியச் சந்தா ரூ. 116.

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானார்ஜீயர் திருவடிகளே சரணம்

ஆழ்வார்கள் வாழி அருளிச்செயல் வாழி
தாழ்வாது மில்குரவர் தாம்வாழி — ஏழ்பாரு
முய்ய வவர்க ளுரைத்தவைகள் தாம் வாழி
செய்யமறை தன்னுடனே சேர்ந்து.

28—2—1967ல் வெளியிட்டது.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

11 Audiappa Naick St
G.T. Madras-1

ஸ்ரீ ராமாநுஜன் 220

சென்னை ஸத்க்ரந்த ப்ரகாசனஸபா மூலமாக மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்: ஸ்ரீ காஞ்சீ P. B. அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 19	ப்லவங்கவஷ் சித்திரை மாதத்திற்காக 28-2-67.ல் வெளியிடப்பட்டது	ஸஞ்சிகை 4

திருவாய்மொழி நூற்றந்தாதி - பா 95.

கண்ணனடியிணையில் காதலுறுவார்செயலை *
திண்ணமுறவே சுருங்கச்செப்பியே —*மண்ணவர்க்குத்
தானுபதேசிக்கை தலைக்கட்டினான்மாறன் *
ஆனபுகழ்சேர் தன்னருள்.

கண்ணன் அடி இணையில்	எம்பெருமானது பத விணையில்	ஆன புகழ் சேர் தன் அருள்	சிறந்த கீர்த்தியோடே சேர்ந்த தமது க்ருபையினாலே
காதல் உறுவார் செயலை	பக்தி யுடையவர்களின் செய்கையை	சுருங்க செப்பி	—சுருக்கமாக அருளிச்செய்து
		மண்ணவர்க்கு	—இவ்வுலகத்தவர்களுக்கு
திண்ணம் உற	—திடமாக	தான் உபதேசிக்கை தலைக் கட்டினான்	தாம் உபதேசிக்குந் தொழிலை முடித்துக் கொண்டார்.
மாறன்	—ஆழ்வார்		

* * * – எம்பெருமான் தம்மைப் பரம பதத்திலே கொண்டு போகப் பதறுகிற படியைக் கண்டு, சரம தசையிலே புதைத்துக் கிடக்கும் மஹாநிதிகளைப் புத்திரன் முதலானார்க்குக் காட்டுமாபோலே ஆழ்வாரும் ஒருவருமிழவாதபடி எல்லார்க்கும் ஹிதங்களைச் சுருக்கமாக உபதேசிக்க வேண்டி *கண்ணன் கழலிணைப் பதிகத்திலே *தாள்வாய்மலரிட்டு நாள்வாய் நாடீரே* *பாடீரவன் நாமம்* *சுனைநன் மலரிட்டு நினைமின் நெடியானே* என்றபடி மநோவாக்காயங்களாகிற கரணத்ரயத்தாலும் ஆகும் வ்ருத்தியை யுபதேசித்துத் தலைக்கட்டினாராயிற்று.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

"செயலைச் சுருங்கச் செப்பி" என்றது 'செய்யவேண்டிய காரியத்தை ஸம்க்ஷேபமாக அருளிச்செய்து' என்றபடி.

முதற்பத்தில் *வீடுமின் முற்றவுமென்கிற பதிகத்திலே பரோபதேசம் பண்ணத் தொடங்கின வாழ்வார் பத்துத்தோறும் உபதேசபரமான பதிகம் அருளிச் செய்துவந்து, இப்பதிகத்தோடே பரோபதேசத்தைத் தலைக்கட்டு கிறாராயிற்று. பெரியார்கள் தாங்கள் திருநாட்டுக்கெழுந்தருளும் சரம ஸமயத்திலே அந்தரங்கரானார்க்கு அருமையான சில வுபதேசங்களைச் செய்து போவதுண்டு. அதற்குச் சரம ஸந்தேசமென்று பெயர். இப்பதிகமும் அதுவாயிரா நின்றது. எம்பெருமானே ஆழ்வாரைத் திருநாட்டுக்குக் கொண்டுபோக விரையாநின்றான்; ஆழ்வாரும் இனி நமக்கு ப்ராப்தி தப்பாதென்று துணிவு கொண்டார். இவர்தாம் ஸம்ஸாரிகள் பக்கலிலே பரம கருணையே வடிவெடுத்தவராகையாலே, ஸம்ஸாரிகளுக்கு இது காறும் வேண்டியபடி உபதேசங்கள் செய்தருளியிருந்தாலும், விபீஷணாழ்வான் ராவண பவனத்தை விட்டுப் பெருமாள் திருவடியேறப் போவதாகக் கிளம்பின பின்பும் "நநச்யந்தமுபேக்ஷேயம் ப்ரதீப்தம் சரணம் யதா" என்று சொல்லிப் பின்னையும் உபதேசிக்க வொருப்பட்டாப்போலே இவரும் சரமோபதேசம் செய்து நிகமித்தருளுகிறார்.

இவர்தாம் பெரிய திருவந்தாதியில் *ஆரானுமாதானுஞ் செய்க, அகலிடத்தை யாராய்ந்து அது திருத்தலாவதே!* என்று, ஸம்ஸாரிகளுக்கு உபதேசிப்பது கஷ்டம்—இது நம்மாலாகாது என்று சொல்லியிருந்தும் *பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும் செயல் நன்றாகத்திருத்திப் பணி கொள்ளவே தாம் அவதரித்த படியைத் திருவுள்ளம் பற்றி *சொன்னால் விரோதமிதுவாகிலுஞ் சொல்லுவன் கேண்மினோவென்று உபதேசத்தில் ருசி குலையாமே போந்தவர் அவ்வுபதேசத்தை இப்பதிகத்தோடு தலைக்கட்டினராயிற்று. ஆசார்ய ஹ்ருதயத்தில் "எண் பெருக்கிலெண்ணுந் திருநாமத்தின் சப்தார்த்தங்களைச் சுருக்கி மாதவனென்று த்வயமாக்கிக் கரணத்ரய ப்ரயோக வ்ருத்தி ஸம்ஸாரிகளுக்குக் கையோலை செய்து கொடுத்து" (228) என்றருளிச் செய்ததும் இங்கே அநுஸந்தேயம். ... (95)

அன்பர்களுக்குக் காரியதர்சியின் அறிவிப்பு.

நாளது பங்குனி மீ 15வ (29—3—67) புதன்கிழமை விசாகத்தன்று ஸ்ரீ ராமாநுஜன் பத்ராதிப ஸ்வாமிக்கு எழுபத்தாறாவது பிராயப்பூர்த்தியாவதை முன்னிட்டு எழுபத்தாறு விஷயங்கள்கொண்ட இரண்டு நூல்கள் ஸ்ரீ ஸ்வாமியால் இயற்றப்பட்டன. (1) அருளிச்செயலுவமை யெழுபத்தாறு. (2) ஸ்ரீ பாஷ்யாதி கரணமெழுபத்தாறு. இவ்விரண்டு நூல்களுள் முந்தியநூல் இவ்விதழில் வெளியிடப்படுகின்றது. பிந்தியநூல் அடுத்த இதழில் (28—3—67ல்) வெளியாகும். அது ஸ்ரீ பாஷ்யத்தின் ஸாரார்த்தங்களை மிகவு மெளிதாக விவரிக்குமது. ஸ்ரீபாஷ்ய ஸாரஸர்வஸ்வமென்றே அதற்கு மறுபெயர். இப்போது இவ்விதழில் வெளிவரும் நூல் திவ்யப்பிரபந்தங்களில் ஆழ்வார்கள் ஆங்காங்கு உபமானமாக வெடுத்தாண்ட விஷயங்களை ஸ்தலவிசேஷ நிர்தேசத்துடன் விவரிக்குமது. இவ்விரண்டு நூல்களும் உபயவேதாந்த ரஸிகர்களுக்கு அரியபெரிய விருந்தாகவமையும். *

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

திருநாங்கூர் மஹோத்ஸவம்.

திருநாங்கூரில் தை யமாவாஸ்யை யுத்ஸவமென்றும் பதினொரு கருட ஸேவை யுத்ஸவமென்றும் உலகப் பிரசித்தமான மஹோத்ஸவத்தைக் கேள்விப் படாதார் இருக்கமாட்டார். அனேகமாய் நேரில் ஸேவித்தவர்கள் பல்லாயிரவ ரிருப்பர். அடியேன் இம் மஹோத்ஸவத்தை மூன்று நான்கு பர்யாயம் ஸேவிக்கப்பெற்றிருந்தாலும் பலவாண்டுகட்குப் பிறகு இவ்வாண்டு ஸேவிக்கப்பெற்றது அசிந்திதமான பெரும் பாக்கியம். ஸ்ரீராமாநுஜன் 207ல் "ஸ்ரீமான் உ. வே. விஞ்சிமூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி (வைகுண்டவாஸி) என்ஸ்பெக்டர் ஸாமி ஐயங்காரென்று ப்ரஸித்தராய் திருநாங்கூரில் வாழ்ந்தவர். தை யமாவாஸ்யை பதினொரு கருடோத்ஸவத்தை ஏற்பாடு செய்த மஹானிவரே" என்றெழுதி அவரது திருவுருவப்படமும் வெளியிட்டிருக்கிறேனென்பதை நினைப்பூட்டுகிறேன். இம்மஹோத்ஸவம் தொடக்கமாகி கிட்டத்திட்ட எண்பது ஸம்வத்ஸரமாகி விட்டது. தொடங்கின வேளையின் நலத்தினால் இது மேன்மேலும் சிறப்புறவே நடைபெற்று வருகின்றதென்பதைக் கட்கூடாகக் கண்டு களித்தேன்.

இது மூன்றுநாளைய மஹோத்ஸவம். அமாவாஸ்யையன்று தொடங்கும். அன்று திருநகரியினின்று ஆழ்வார் புறப்பட்டருளித் திருநாங்கூர்த் திருப்பதிகள் பதினொன்றையும் மங்களாசாஸனம் செய்யத்தொடங்கி ஒவ்வொருஸன்னிதிக்கு மெழுந்தருளிப் பாசுரங்களின் அநுஸந்தான பூர்வகமாக மங்களாசாஸனம் செய்தருளிக் கடைசியாக மணிமாடக்கோயில் திருமுற்றப்பந்தலில் மறுநாள் பகல் 12 மணிக்குள்ளாகவந்து சேர்வதும், பதினொரு திருப்பதியெம்பெருமான்களும் அங்கு வந்து சேர்ந்து 'நந்தாதீபகடப்ராணாந்தக" என்று ப்ரஸித்தமான ச்லோகத்தினடைவிலே ஒவ்வொரு எம்பெருமானையும் ஆழ்வார் வலம்வந்து முன்னிற்க அதிகம்பீரமாக ஒவ்வொரு பாசுரம் ஸேவிக்குமழகு வாசாமகோசரம். பிறகு திருமங்கையாழ்வார் எம்பெருமான் ஸ்தானத்திலே நிற்க, அவரை வண்புருடோத்

தம மணவாளமாமுனிகள் வலம்வந்து * பேதை நெஞ்சே * * மாறன் பணித்த * அணைத்தவேலும் * இத்யாதிகளாலே மங்களாசாஸனம்செய்து தலைக்கட்டுமழகு விண்ணுளார்க்கும் காண்பதரிதென்னத் தட்டில்லை.

இந்த மங்களாசாஸன மஹோத்ஸவம் தலைக் கட்டிய பின்பு மாலை, 3 அல்லது 4 மணிக்கு எல்லா எம்பெருமான்களும் ஆழ்வாருடனும் மணவாளமாமுனிகளுடனும் மணிமாடக் கோயிலினுள்ளே யெழுந்தருளித் தந்தமக்கு வாய்த்த திரு மண்டபங்களிலே தங்கித் திருமஞ்சனங் கண்டருளி தனித்தனியே பெரிய திருவடி வாஹனங்களிலமர்ந்து இரவு முழுவதும் திருவீதி மஹோத்ஸவங் கண்டருளுமழகு *என் சொல்லிச் சொல்லுகேனென்கிற நம்மாழ்வார்பாசுரத்தையே நினைப்பூட்டும்

ஆழ்வார், திருநகரியினின்று புறப்பட்டெழுந்தருளும்போது மங்களாசாஸனம் செய்ய வாய்ப்புப் பெறாத திருவெள்ளக் குளத்தையும் திருத்தேவனார் தொகை

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

யையும் திருநாங்கூரிலிருந்து திருநகரிக்குத் திரும்புகையில் மங்களாசாஸனம் செய்துகொண்டே யெழுந்தருளியாகும். திருநகரி சேர்ந்தருளினபிறகு அன்றிரவு அவ்விடத்தில் வயலாலி மணவாளன் பெரிய திருவடி யுத்ஸவமும் ஆழ்வார் ஹம்ஸவாஹனோத்ஸவமும் கண்டருளுங் காட்சி விடாய் பொலிந்து விளங்கும்.

ஆழ்வார்திருநகரி வைகாசித் திருநாளில் ஐந்தாந் திருநாளன்று நவ திருப்பதி யெம்பெருமான்களின் பெரிய திருவடி மஹோத்ஸவ நிகழ்ச்சியைக் கண்டே இத்திருநாங்கூர் மஹோத்ஸவம் தொடங்கப்பட்டதாயினும் இது உத்ஸவ விஸ்தார விசேஷத்தினால் மிக மேம்பட்டுவிட்டதென்று பக்தர்கள் ஒருமிடறாகச் சொல்லக் கேட்டதுண்டு. ... ... (*)

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீராமாநுஜன் சந்தா செலுத்தியவர்கள்.

— முன் தொடர்ச்சி —

MADRAS MEMBERS.

31. V. P. Rangachariar 19
32. V. Ranganathan 23
33. G. Srinivasachariar 24
34. K. V. Srinivasan 5
35. S- ராமநாதன் செட்டியார், G. T.
36. K. ராமைய செட்டி ,,
37. விஜயவல்லியம்மா ,,
38. P. B. Singarachariar, ,,
39. A. M. Chakrapani Reddiar 16
40. Singaram Pillai, G. T.
41. V. Ananthachariar 32
42. P. B. Narasimhan 33
43. கபிஸ்தலம் ஸ்ரீநிவாஸாசாரியர், டீசர் 33
44. P. G. மாணிக்க ராமாநுஜ தாஸர், G.T.
45. T. G. Aravamudu Iyengar 17
46. A. K. Rudrakoti 12
47. P. A. Soundararajan 17
48. N. T. ரகுராமகிருஷ்ணன்
49. T. Ramakrishna Rao 17
50. S. Ramaswami Iyengar 24
51. R. Rangarajan, Life Member 6
(of New Delhi)
52. C. திருவேங்கட முதலியார் 10
53. A. ஸ்ரீநிவாஸய்யங்கார் 15
54. ஸ்ரீவத்ஸஸோமதேவ சர்மா 33
55. Rao Sahib S. Raghavaiyengar 24
56. M. Rajagopalachariar 17

வெளியூர் மெம்பர்கள்.

57. T ராமாநுஜாசாரியர், திருவிந்தளூர்
58. M. திருமலாசாரியர், மாமண்டூர்
59. கிருஷ்ணராமாநுஜ தாஸர், கீழ்ப்பாவூர்
60. வேலாயுத நாடார், கீழ்ப்பாவூர்
61. Krishnamachariar, Chikballepur
62. T. S. கிருஷ்ணஸ்வாமையங்கார், சீர்காழி
63. P K. ராஜய்ய செட்டியார், ,,
64. R. B. Chari, Bombay
65. S. Thiruvengadathan, Bangalore
66. P. Ramaswami Trichi-2.
67. அய்யாஸாமிப் பிள்ளை,
நடராஜப் பிள்ளைசாவடி
68. S Soumyanarayanan, New Delhi
69. C. V. Rajan, Bangalore
70. உத்தமநம்பி. சடகோபாசாரியர், ஸ்ரீரங்கம்
71 M. A. ஸுந்தரராஜாசாரியர், ,,
72. T V. Krishnaswami Iyengar, B.A., B.L.,
பேராவூரணி
73. விரக்தி ஸ்ரீநிவாஸாசாரியர், முஸரவாக்கம்
74. K. பிச்சுமணி, B.O.L., உல்லாஸநகர்
75. R. ராமஸ்வாமி ஐயங்கார், பொத்தனூர்
76. வங்கீபுரம் ராஜமையங்கார், மன்னார்குடி
77. S. R நாராயணையங்கார், மாரிகுப்பம்
78 Dr. Ramayyangar, Nellore
79. O. K. S. குப்புஸாமி கண்ணதாஸி, மதுரை
80. Dr. R Sundararajan, Coimbatore
81. S. R. கோவிந்தராஜுலு. சேலம்
82. ஸ்ரீ பரிமள ரங்கநாதஸ்வாமி
தேவஸ்தானம், திருவிந்தளூர்
83. S. P. ஸாரதி ஆவடி
84. ராமநாதன் செட்டியார், குணசீலம்
85 S. சௌரிராஜய்யங்கார், நன்னிலம்
86. T. T. வெங்கடாசலப் பிள்ளை.
காட்டுமன்னார்கோவில்
87. V. மாசிலாமணி, தண்டையார்பேட்டை
88: கோ. கம். திருமலாசாரியர் ஸ்வாமி,
பிரயாகை.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation, Kolkata. Digitization: eGangotri.
G-T-Madras-1

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்,



ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரிய ஸ்வாமியின்

பராபவஸூ மீன விசாகோத்ஸவப் பத்திரிகை.

ஸ்ரீ ஸ்வாமியின் எழுபத்தாறுவது திருநக்ஷத்திர பூர்த்தியை முன்னிட்டு

ஸ்ரீ காஞ்சியில் ஸ்வாமியின் திருமாளிகையில்

நாளது பங்குனிமீ 6உ (20—3—67) திங்கட்கிழமை திருவாதிரை முதல்
பங்குனிமீ 15உ (29-3-67) புதன்கிழமை திருவிசாகம் வரை

வேதப்ராராயணம், திவ்யப்ரபந்தஸேவை, ரஹஸ்யாநுஸந்தானம், ஸ்தோத்ரபாடம், வித்வான்களின் உபந்யாஸம் இவை நடைபெறும். ஆப்தர்கள் அனைவரும் கூடியிருந்து சிறப்பாக நடப்பிக்கும்படி பிரார்த்திக்கப்படுகிறார்கள்.

இங்ஙனம்:

காஞ்சீபுரம்,
28—2—67.

பிரதிவாதிபயங்கரம் செல்வமணி என்கிற

ரங்கநாத தாஸன்.

SRI KANCHI MAHA VIDWAN JAGADACHARYA SIMHASANADHIPATHI

P. B. ANNANGARACHARYA SWAMI'S

SEVENTY SEVENTH BIRTH DAY CELEBRATIONS

The Seventy Seventh Birth day of Sri Swami is being celebrated this year at his residence in Kanchi from 20—3—67 to 29—3—67 Wednesday Vedas, Divya Prabandhams, Stotras and Rahasyas will be chanted. Procession of the Veda Goshti and religious lectures will also take place as usual.

You are cordially invited to attend.

Kancheepuram,
28—2—67.

CHELLAMANI alias

P. B. RANGANATHACHARYA.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அடியேனுடைய ஸொந்த விஜ்ஞாபனங்கள். P. B. A.

அடியேனிடத்தில் அந்தரங்கவிச்வாஸ முள்ள பெரியார்கள் மூன்று வருடங்களுக்கு முன் கழிந்த 21-2-64 தேதியை ஞாபகத்தில் திடமாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஸமீபத்தில் கடந்த 21-2-67 தேதியன்று பல ஸஹ்ருதயஸஹ்ருந்மணிகள் தங்களுடைய ஞாபகசக்தியைக் காட்டி மங்களாசாஸனக் கடிதங்கள் விடுத்திருக்கின்றார்கள். 21-2-64 தேதியின் விசேஷம் ஞாபகமில்லாதவர்களுக்கு அதை நினைப்பூட்டித் தானே யாகவேண்டும். சிறிது நினைப்பூட்டுகிறேன். சோபக்ருத்வூ மாசி மாதத்தில் வந்தது 21-2-64 தேதி. அன்று தான் அடியேனு ப்ரபலமான ஒரு அஸ்வாஸ்த்ய மேற்பட்டது. அப்போதிருந்த நிலைமை ப்ராப்தி அணித்தாய் விட்டதென்றே திண்ணமாக எண்ணவேண்டியதாயிருந்தது. அப்போது "க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே" என்கிற சுலோகத்தை அடியேன் விரிவாக விவரித்துப் பத்ரிகைகளில் வெளியிட்டிருந்தேன். அடியேன் க்ருதக்ருத்யனல்லாமையினால் இப்போது பிரதீக்ஷிக்கவில்லையே யென்று பெருந்தேவி மணவாளனை பேரருளாளன் திருவுள்ளத்தில் படும்படி அந்தரங்கமாக விஜ்ஞாபித்திருந்தேன். அந்த விஜ்ஞாபனத்தைப் பேரருளாளன் தன்னுடைய திருநாமம் பழுது படாதபடி அதற்கிணங்க ப்ராப்திகாலத்தை ஒதுக்கி வைத்திருப்பதாகப் பல சான்றுகளினாலறியப் பெற்றேன். அடியேனுடைய திருத்தகப்பனார் நாற்பத்து மூன்றாவது திருநக்ஷத்ரத்தில் விண்ணுலகேகினார். பிதாமஹாதிகளும் 50. 55 க்குள்.

நம்மாழ்வார் * ஒழிவில்காலத் திருவாய் மொழியில் "வைத்தநாள் வரை எல்லை குறுகிச் சென்று எய்த்திளைப்பதன் முன்னம்" என்கிற பாசுரத்தினால் ஆயுளை நினைப்பூட்டி க்ருத்ய விசேஷத்திற்கு விரைவுறுத்துகின்றார். தொண்டரடிப்பொடியாழ்வார் "உண்டு இராக்கிடக்கும் போதும் உடலுக்கே கரைந்து நைந்து" என்று ஸம்ஸாரிகளின் படியைப் படியெடுத்துக் காட்டுகிறார். பரோக்ஷப் பெரியார்களும் ப்ரத்யக்ஷப் பெரியார்களும் நம்மீது கருணை கொண்டு ஹிதபுத்தியுடன் நமக்கு உபதேசித்தருளுமவற்றை நாம் காற்கடைக் கொண்டாலும் "ஸ்வாபிமானத்தாலே ஈச்வராபிமானத்தைக் குலைத்துக் கொண்ட இவனுக்கு ஆசார்யாபிமானமொழிய கதியில்லை யென்று பிள்ளை பலகாலுமருளிச் செய்யக் கேட்டிருக்கையாயிருக்கும்" என்கிற ஸ்ரீவசந பூஷண திவ்ய சாஸ்த்ர திவ்யஸூக்திப்படியே ஆசார்யாபிமானம் செய்விக்கும் சேமங்கள் சிந்தைக்கும் கோசரமல்ல. நமக்கு ஏதேனும் சேமம் விளைந்தால் இது நம் தலையாலே வந்ததன்று, ஈச்வராபிமானத்தாலும் ஆசார்யாபிமானத்தாலும் விளைந்ததத்தனையென்று அநுஸந்திக்குமாறு மேலையார்கள் கட்டளையிட்டு வைத்திருக்கிறார்கள்.

இந்த விஜ்ஞாபனத்தின் தொடக்கத்தில் ப்ரஸ்தாவித்த 21-2-64 தேதியிலிருந்து அடியேனுக்குப் புநர்ஜன்மமுண்டாகியிருப்பதாகவே நினைத்திருக்கிறேனாதலால் இப்போதடியேனுக்கு வயது எழுபத்தாறல்ல; மூன்று நிறைந்து நான்காவது பிராயம் நிகழ்கின்றதென்றே கொண்டிருக்கிறேன். இளமையில் அநுபவித்த மூன்று பிராயங்கள் அறியாக்காலமாகச் சென்றதாதலால் அப்பருவத்தில் நன்மையோ தீமையோ நினைவுக்கு வர ப்ரஸக்தியில்லை. இப்போது அடியேன்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அடைந்த இளம்பிராயம் அப்படியன்றிக்கே நன்கறிந்து அநுபவிக்குமதாகையாலே நினைதோறும் சொல்லுந்தொறும் நெஞ்சு குளிர்கின்றது. தேனூறியெப்பொழுதும் தித்திக்கின்றது. ஆத்மாவை ஜ்ஞாநாநந்த மயனாக சாஸ்த்ரம் சொல்லுகையாலே ஆனந்தமே ஆத்மாவுக்கு வடிவு என்று கொள்ளத்தட்டில்லை. ஆனந்தத்திற்கு ஹேதுக்கள் பல பலவாக இருந்தாலும், ப்ரமாணம் ப்ரமேயம் ப்ரமாதா என்னுமிவற்றின் அநுபவத்தினால் விளையுமானந்தம் ஈடுமெடுப்புமில்லாதது. "முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப் பெற்றோம் முழுது நமக்கவை பொழுது போக்காகப் பெற்றோம்" என்று மணவாளமாமுனிகளும், *தெரித்தெழுதி வாசித்துங் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும்போக்கினேன் போது* என்று திருமழிசைப் பிரானும் அருளிய பாசுரங்களை அடியேன் நிச்சலும் நினைப்பவன். *பழுதே பலபகலும் போயினவென்று அஞ்சியழுதேன்* என்ற பொய்கையார் பாசுரத்தையும். * ஊமனார் கண்ட கனவிலும் பழுதாயொழிந்தனகழிந்த வந்நாள்கள் * என்கிற மங்கையர்கோன் பாசுரத்தையும் கதாசித் சொல்ல நேர்ந்தாலும் 'இப்பாசுரங்கள் நமக்காக வன்று' என்றே அடியேன் நினைத்துப் போமவன். ப்ரமாணம் என்று நாம் கொள்ளத்தக்கவை நம்முடைய முன்னோர்கள் ஆதரித்து அல்லும் பகலும் அநுபவித்த உபயவேதாந்த திவ்யக்ரந்தங்களேயாதலால் அவற்றை *அல்லு நன் பகலுமிடை வீடின்றி * என்று ஆழ்வாரருளிச்செய்த கணக்கிலே இருபத்து நான்கு மணிகளில் இருபது மணிக்குக் குறையாமல் அநுபவித்து அடியேனடையுமானந்தம் அந்தர்யாமியொருவனே யறிய வல்லான். பிள்ளைப் பெருமாளையங்கார் கலம்பகத்தில் "மேருகிரியவுணனுடல் மிடல் கெடுத்தாயென்பர், அது உன் கூருகிரே யறிந்ததல்லால் கோவே! நீயறியாயால்" என்கிறார். ஹிரண்யாஸுரனுடைய உரம் பிளந்தவாற்றை எம்பெருமானுடைய திருநகங்கள் அறியுமத்தனை யல்லது அப்பெருமான் தானுமறியான் என்றாப் போலே அடியேனுடைய இவ்வானந்தத்தை எம்பெருமான் திருவுள்ள மறியுமேயன்றி எம்பெருமான் தானுமறியகில்லான் என்பேன்.

இனி ப்ரமேயாநுபவானந்தத்தைப் பற்றிப் பேசப்புகுந்தாலோ * காலாழும் நெஞ்சழியும் கண் சுழலுமென்னுமத்தனை. ப்ரமேயங்களில் தலையானவன் பேரருளாளனே, அவனை யநுபவித்து எய்து மானந்தத்திற்குப் பாசுரமிடும் வகை யறியேன். நம்மாழ்வார் பேரின்ப வெள்ளம் என்றொரு சொல்லைக் காட்டி "வானத்திமையவர் சூழவிருப்பர் பேரின்பவெள்ளத்தே"என்று அது தேசாந்தரே தேஹாந்தரே கிடைக்குமதென்றார். 'வானத்திமையவர் இங்கே வந்து சூழப் பேரின்ப வெள்ளத்தேயிருப்பர்' என்று பொருள் கொள்ளுவோமிதற்கு. * யத்ர பூர்வே ஸாத்யாஸ் ஸந்தி தேவா:*என்னப்பட்ட தேவர்கள்,தேவாதிராஜனாய் இமையோர் தலைவனாய் அமரர்களதிபதியாயிருக்கும் நம்பேரருளாளன் ஸன்னிதியிலே வந்து படுகாடு கிடப்பர்கள் என்னத்தட்டுண்டோ? ஆகவே நம்முடைய ப்ரமேயாநுபவம் ப்ரமாதாக்களின் அநுபவத்தை விட்டிராதென்று கொள்க. ஆக இப்படிப்பட்ட ப்ரமாண ப்ரமேய ப்ரமாத்ரநுபவம் நீடூழிநடைபெற்று *ஸம்ஸார ஏஷ பகவந் அபவர்க்க ஏவ* என்கிற ஆசார்யஸூக்தி அந்வர்த்தமாகும்படி அருள்புரிய வேணுமென்று அருளாளனடியிணையில் இன்று (27-2-67) அர்த்தித்து நிற்கின்றேன். *

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீரஸ்து.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதுபய வே. திருமலை ஈச்சம்பாடி வரதாசார்ய ஸ்வாமியின் சதாபிஷேக மஹோத்ஸவம்.

பெருமாள்கோயிலென்னும் சின்னகாஞ்சீபுரியில் வடவண்டை மாடவீதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமதுபயவே. திருமலை ஈச்சம்பாடி வரதாசார்ய ஸ்வாமியை ஸ்ரீவைஷ்ணவமண்டலி பெரும்பாலும் அறிந்தேயிருக்கும். இந்த ஸ்வாமிக்கு, நிகழும் மாசிமாஸத்து ஹஸ்த நக்ஷத்திரத்தில் சதாபிஷேகமென்னும் அசீதி திருநக்ஷத்ரபூர்த்தி சிறப்புற நடைபெற்றது, எண்பது பிராயம் பூர்த்தியடைந்தால் சதாபிஷேகமென்று பெரியோர்கள் வழங்குவர்கள். எண்பது வருஷங்களுக்குத் தொள்ளாயிரத்தறுபது மாஸங்களாகும். இந்த 960 மாதங்களில் ஸஹஸ்ர சந்த்ரதர்சனம் ப்ராப்தமாய்விடுகிறது. 960 மாதங்களுக்கு ஆயிர சந்திரதரிசனம் எப்படி ஏற்படுமென்று சங்கைகொள்ள வேண்டா. வேதத்தில் ஆருவது காண்டத்தில் "அஸ்தி த்ரயோதசோ மாஸ இத்யாஹு:" என்று ஓதியிருக்கிறபடி சாந்த்ரமானரீதியில் பதின்மூன்று மாதங்கள் தேறக் கூடிய வருடங்கள் பல வரும். அதையிட்டு எண்பது வருஷங்களுக்கு ஸஹஸ்ர சந்த்ர தர்சனம் ப்ராப்தமாகி விடுகிறதென்று தைவஜ்ஞர்கள் நிலையிட்டிருக்கிறார்கள். ஷஷ்ட்யப்தபூர்த்தி சாந்தி போலே சதாபிஷேக சாந்தியும் சாஸ்த்ர விஹிதம்.

ப்ரஸ்தாவித்த ஸ்ரீவரதாசார்ய ஸ்வாமியின் சதாபிஷேக மஹோத்ஸவத்தை ஸ்ரீஹஸ்திசைலசிகரோஜ்வல பாரிஜாதனை பேரருளாளனும் பெருந்தேவித்தாயாரும் சிறப்பாகக் கொண்டாடினார்கள். 27-2-67 திங்கட்கிழமையன்று இப்பெரியாரின் ஜன்ம நக்ஷத்ரமான ஹஸ்தம். அன்று தேவப்பெருமாளுடைய தவனவுத்ஸவஸமாப்தியாதலால் காலை 9 மணிக்கு மேல் திவ்யதம்பதிகள் புறப்பட்டருளி உபயகோஷ்டிகளுடனும் வெள்ளிக்கிழமை தோட்டத்து மஹாமண்டபத்தில் அமர்ந்து திருமஞ்சனம் திருவாராதனம் கோஷ்டீ விநியோகம் முதலியன க்ரமேண கண்டருளி இரவு ஒன்பது மணிக்கு ஆஸ்தானம் சேர்ந்தருளுமிந்த மஹோத்ஸவம் கண் கொள்ளாக் காட்சி யென்னத்தகும். இது மாமூலாகக் கண்டருளு முத்ஸவமாயினும் ப்ரஸ்துத வரதாசார்ய ஸ்வாமிக்காகக் கொண்டாடின மஹோத்ஸவமென்றே என்போல்வார் கருதுவது.

இப்பெரியார் இளமையில் லௌகிக உத்யோகத்தில் அமர்ந்திருந்தும் அதை உபேக்ஷித்து விலகிப் பேரருளாளனுக்கு நித்யகைங்கரியம் பண்ணவேணுமென்னுமபிநிவேசத்தினால் அருளிச் செயல் வரியடைவே கற்று ஸ்வரூபக்ரந்தங்களையும் அதிகரித்து, ஆதியில் தாம் உத்தேசித்தபடி கைங்கர்யத்தை "ஒழிவில் காலமெல்லா முடனாய் மன்னிப்படியே அநுபவித்து ஆனந்தித்து வருகிறார். தேவப்பெருமாள் ஸன்னிதியில் திருமங்கையாழ்வார் சாத்துமுறை யுபயமும், தெப்பவுத்ஸவத்தில் முதல்நாளுபயமும் சிறப்பாக நடத்திவருகிறார். ஸமீபகாலத்தில் மணவாள மாமுனிகள் ஸன்னிதியில் நடந்த மஹாமண்டபத் திருப்பணியில் மூவாயிரம் ரூபாய்க்குமேல் விநியோகித்துக் கைங்கர்ய பூர்த்தி செய்வித்தார்.

காஞ்சீவாஸிகளான ஸ்ரீவைஷ்ணவர்களுள் தற்காலம் பெரியவராக விளங்குமிப் பெரியார் "கரிச! வர்த்தேய ஸதா த்வதந்திகே" என்று கூரத்தாழ்வான் பாரித்த கணக்கிலே பேரருளாளனுடைய அருளிச்செயல் கைங்கர்யத்திலே நித்யநிரதராய் இங்கே காணவிப்பிறப்பே மகிழ்வர் எல்லியுங்காலையே.

நித்யஸ்ரீர் நித்யமங்களம்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

11. Audiappa Naick St
G.T. Madras

ஸ்ரீரஸ்து.

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

அருளிச்செயலுவமை யெழுபத்தாறு

ஸ்ரீ காஞ்சி அண்ணங்கராசாரியர் தமது எழுபத்தாறு பிராயப்பூர்த்தி நினைவு மலராக எழுதியது.

நாலாயிர திவ்வியப்பிரபந்தங்களில் உபமானமிட்டும் உத்ப்ரேக்ஷித்தும் கூறப்படும் விஷயங்களில் எழுபத்தாறு; திருப்பல்லாண்டிலிருந்து திருவாய்மொழியளவாகத் திரட்டப்படுகின்றன.

1. *அபிமானதுங்கன் செல்வனைப்போல.*

திருப்பல்லாண்டில் எம்பெருமானுக்குப் பல்லாண்டுபாடத் தொடங்கிய பெரியாழ்வார் தாமொருவராகப் பல்லாண்டு பாடி த்ருப்தி பெறுமல் முமுக்ஷுக்களையும் கைவல்யார்த்திகளையும் ஐச்வர்யார்த்திகளையும் அழைக்க, அவர்கள் வந்து சேர அவர்களோடுங் கூடி மங்களாசாஸனம் செய்தருளுகிருரென்றுள்ளது. முடிவில் ஐச்வர்யார்த்தியின் மங்களாசாஸனப் பாசுரம் *அல்வழக்கொன்றுமில்லாவென்பது. இதில் செல்வநம்பியென்கிற மஹான் உபமானமாகக் கூறப்படுகிருர். விஷ்ணு சித்தரைப் பெரியாழ்வாராக ஆக்கினவர் அந்த மஹானேயென்பது சரித்ர ஸித்தம். அவர் திருக்கோட்டியூரில் திருவவதரித்தவராதலால் * அணிகோட்டியர் கோன்* எனப்பட்டார். மேல் பெரியாழ்வார் திருமொழியில் (4–4-) *நாவகாரியமென்கிற திருக்கோட்டியூர்ப் பதிகத்தில் (8.) *நளிர்ந்த சீலன் நயாசலன் அபிமானதுங்கனை நாடொறும் தெளிந்த **செல்வனைச்** சேவகங்கொண்ட செங்கண்மால் திருக்கோட்டியூர்* என்றருளிச்செய்ததுங் காண்க. *உபமாநமசேஷாணும் ஸாதூநாம் யஸ் ஸதாபவத்* என்கிற ஸ்ரீவிஷ்ணுபுராண வசனத்தின்படி ப்ரஹ்லாதாழ்வான் ஸாதுக்களுக்கெல்லாம் உபமான பூமியாயிருந்ததுபோல, செல்வநம்பியும் ஸ்ரீவைஷ்ணவோத்தமர்களுக்கெல்லாம் உபமான பூமியாயிருந்தாரென்பது அறியலாகிறது. நெடுங்காலம் க்ஷுத்ர பலார்த்தியாயிருந்து இன்ருக வந்து பணிந்த [ஐச்வர்யார்த்தியான]

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

இவ்வதிகாரி திருத்துழாய்போலே இயற்கையான பக்திபரிமளம் பூண்ட செல்வநம்பியைத் தனக்கு உவமை கூறுதல் பொருந்துமோ? எனின்; பெருவிலையனான ரத்னம் நெடுநாள் சேற்றிலே யழுந்திக்கிடந்து ஒளிமழுங்கியிருந்து ஒருநாள் சேறுகழுவினவாறே இயற்கையான வொளியைப் பெற்று அனர்க்க ரத்னங்களோடொக்க எண்ணப்பெறுவது காணா நின்றோமன்றோ. ஆசார்ய ஹ்ருதயத்தில் "ஒன்று கூடினதாய்ப் பற்றறுக்க மீண்டொழிகையாலே பழவடியேனென்னுமதொன்றுமே ஒழிக்க வொழியாதது" என்ற சூர்ணை வியாக்கியானத்துடன் இங்கு ஸேவிக்கத்தக்கது. ... ... (1)

2. *சீதக்கடலுள்ளமுதன்ன தேவகி.*

பெரியாழ்வார் திருமொழி. 1-2-1. *சீதக்கடலுள்ளமுதன்னதேவகி* என்பதில் ஸ்ரீ க்ருஷ்ண சிசுவை யசோதைப் பிராட்டி பக்கலிலே அனுப்பி வைத்த தேவகிப் பிராட்டி "சீதக்கடல் உள்ளமுதன்ன தேவகி" எனப்பட்டாள். இப்பதிகத்திலேயே மேலே *திருவின் வடிவொக்கும் தேவகி பெற்ற* என்னுமிடத்துத் தேவகியை ஸ்ரீ மஹாலக்ஷ்மியோடு ஒத்தவளாகச் சொல்லியிருப்பதற்கேற்ப இங்கும் தேவகிக்கு லக்ஷ்மியோடு ஸாம்யமே சொல்லப்படுகிறது. சீதக்கடலின் உள்ளமுது—ஸ்ரீ மஹாலக்ஷ்மி; அவளை யொத்தவள் தேவகி—என்றதாயிற்று. தேவர்களுக்காகக் கடல் கடைந்த காலத்தில் இரண்டு அமுதம் தோன்றியது; ஒன்று புறவமுது; மற்றொன்று உள்ளமுது. புறவமுதை அமரர்கள் கொண்டனர்; உள்ளமுதை வங்கக்கடல்கடைந்த மாதவன் கொண்டனன். *விண்ணவரமுதுண அமுதில் வரும் பெண்ணமுதுண்ட எம்பெருமானே* என்றார் திருமங்கையாழ்வார். *மந்தரம் நாட்டியன்று மதுரக்கொழுஞ்சாறு கொண்ட சுந்தரத் தோளுடையான்* என்ற நாச்சியார் பாசுரத்தில் 'மதுரக்கொழுஞ்சாறு' என்பதற்கு ஸ்ரீ மஹாலக்ஷ்மி யென்று பொருள் கொண்டார் கூரத்தாழ்வான். ஸௌந்தர பாஹு ஸ்தவத்தில் *உததிக மந்தராத்ரி மதிமந்தா லப்தபயோ மதுரரஸேந்திராஹ்வஸௌத ஸௌந்தரதோ: பரிகம்* என்றவிடத்து அடியேனுடைய வியாக்கியானம் காண்க. ஆக, 'சீதக்கடல் உள்ளமுது' என்றது ஸ்ரீ மஹாலக்ஷ்மியையாய் அவளைப்போன்ற பாக்யவதி தேவகி என்றதாயிற்று. எம்பெருமானை வல்லபனாகக் கொள்ளப்பெற்ற பாக்யவதி அவள். அவனை மகனாகக் கொள்ளப் பெற்ற பாக்யவதி இவள். பிராட்டியைப் போலே பரோபகாரமே சீலமான தேவகி யென்றவாறு. ... ... (2.)

3. *முத்தும் மணியும்.........தலைப்பெய்தாற்போல்.*

பெரியாழ்வார் திருமொழி 1-2-2. *முத்தும் மணியுமென்கிற பாட்டில் ஸ்ரீ க்ருஷ்ண சிசுவின் பாதங்களிலுள்ள பத்து விரல்களும் யசோதைப் பிராட்டியினால் வருணிக்கப் படுகின்றன. நவரத்னங்களையும் மாறிமாறிப் பதித்தாற்போலே விளங்குவனவாம் திருவிரல்கள். பாட்டில் சில ரத்னங்களைச் சொன்னது நவரத்னங்களுக்கும் உபலக்ஷணம். கோமேதகம் நீலம் பவழம் புட்பராகம் மரகதம் மாணிக்கம் முத்து வைடூரியம் வைரம் என்பன நவரத்தினங்களாம். கால்களுக்கு இடுகின்ற செம்பஞ்சு மருதாணி யென்பன போல ஸ்ரீ க்ருஷ்ணனுடைய பாதங்களில் ஒன்பது விரல்களுக்கு நவரத்ன வர்ணத்தையும் மற்றொரு விரலுக்குப் பொன்னிறத்தையும் யசோதை இட்டு "என் மணி

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வண்ணனுடைய பாதங்களில் பத்துவிரலும்-நவரத்னங்களேயும் நல்ல பொன்னேயும் ஒளி விளங்க மாறிமாறிப் பதித்து வைத்தாற்போலிருப்பதை வந்து பாருங்கள்" என்று தோழிமார்களே விளித்துக் காட்டினளாயிற்று. ... ... (3)

4. *வாரணம் பைய நின்றூர்வதுபோல்.*

பெரியாழ்வார் திருமொழி. 1-7-1. *தொடர் சங்கிலிகை சலார்பிலாரென்னத் தூங்குபொன்மணியொலிப்ப, படுமும்மதப் புனல் சோர வாரணம் பையநின்று ஊர்வது போல், உடன்கூடிக் கிண்கிணி ஆரவாரிப்ப உடைமணி பறைகறங்கத், தடந்தாளிணே கொண்டு சார்ங்கபாணி தளர்நடை நடவானே.* கண்ணபிரான் தளர்நடை நடக்கும் போது காலிலணிந்துள்ள பாதச்சதங்கை கிண்கிணென்று சப்திக்கவும், இடையிற்கட்டிய சிறுமணிகள் பறைபோலொலிக்கவும் நடக்கின்ற ஆயாஸத்தினல் உடலில் வேர்வைநீர் பெருகவும் நேருமாதலால் இதற்கு ஓர் ஏற்ற உபமானம் கூறப்படுகின்றது. யானையானது மதத்தின் மிகுதியினுல் கட்டுத்தறியை முறித்துவிட்டுக் காலிலிட்ட இருப்புச்சங்கிலியை யிழுத்துக்கொண்டு நடக்க, அந்தச் சங்கிலித்தொடர் சலார் பிலாரென்று ஒலிக்கவும், பொன்கயிற்றினல் கட்டித் தனது இரு புறத்திலும் தொங்கவிட்ட மணிகள் தொனிக்கவும் மதநீர் பெருகவும் பெற்று மெல்ல நடக்கும் யானை ஏற்ற உவமையாயிற்று. ... (4)

5. *வெள்ளிப் பெருமலேக்குட்டன்—கருமலேக்குட்டன்.*

பெரியாழ்வார் திருமொழி 1-7-5. *முன்னலோர் வெள்ளிப் பெருமலேக்குட்டன் மொடு மொடு விரைந்தோடப், பின்னேத் தொடர்ந்ததோர் கருமலேக்குட்டன் பெயர்ந்தடியிடுவதுபோல், பன்னியுலகம் பரவியோவாப்புகழ்ப் பலதேவனென்னும், தன்னம்பியோடப் பின் கூடச்செல்வான் தளர்நடை நடவானே.* நந்தகோபர் திருமாளிகையில் நம்பிமூத்தபிரான் (பலராமன்) முன்னேயோட, கண்ணபிரான் அவன் பின்னே யோடுகிற படிக்கு ஏற்ற உவமை கூறப்படுகின்றது. பலராமன் வெண்ணிறமுள்ளவனுதலால் அவன் ஓடுவது வெள்ளிமலேயீன்ற குட்டி யோடுவதாகவும், அவன் பின்னே கண்ணனென்னுங்கருந்தெய்வம் ஓடுவது கருமலேயீன்ற குட்டி தொடர்ந்தோடுவதாகவும் வைத்துக் கூறப்பட்டது. [மொடு மொடு விரைந்தோட—நடக்கும்போது தோன்றிய விரைவின் குறிப்பு; ஒலியின் குறிப்புமாம்.] ... ... (5)

6. *செங்கமலப்பூவில் தேனுண்ணும் வண்டேபோல்.*

பெரியாழ்வார் திருமொழி 1. 8. *பொன்னியல் கிண்கிணிப் பதிகத்தில் ஸ்ரீக்ருஷ்ண சிசு பருவத்திற்குத் தகுதியாக ஓடிவந்து தன்னே யணேத்துக்கொள்ளவேணுமென்று யசோதைப்பிராட்டி வேண்டிக்கொள்ளுமாறு சொல்லுகிறது. அதில் இரண்டாம் பாட்டில்—கண்ணனுடைய கூந்தல் முகத்திலே அலேயும்படிக்கு ஏற்ற உவமை கூறப்படுகின்றது. [*செங்கமலப்பூவில் தேனுண்ணும் வண்டேபோல், பங்கிகள் வந்துன்பவளவாய் மொய்ப்ப.*] செந்தாமரைப்பூவில் தேனேக் குடிப்பதற்காக மொய்க்கின்ற வண்டுகளேப் போல் கண்ணனது கரியகூந்தல் வந்து பவளம்போற் செந்நிறமான வாயில் மொய்த்துக் கொள்ளுகின்றனவாம். நாச்சியார் திருமொழியில் (14-8.) *களிவண்டெங்குங் கலந்தாற்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

போல் கமழ்பூங்குழல்கள் தடந்தோள்மேல் மிளிர நின்று விளையாட விருந்தாவனத்தே கண்டோமே* என்ற பாசுரம் இப்பாசுரத்தை ஒருபுடை யொத்திருக்கும். குழல்களுக்கு வண்டுகளை யொப்பிடுவதற்குமட்டும். ... ... (6)

7. *மின்னனைய நுண்ணிடையார் விரிகுழல்மேல் நுழைந்தவண்டு இன்னிசைக்கும் வில்லிபுத்தூர்.*

பெரியாழ்வார் திருமொழி 2-2-6. இப்பாசுரத்தில் உபமானோபமேய நிர்தேசமில்லை யாயினும் ஒன்றரையடிகளால் உபமானங்கூறி, அதனால் ஒரு உபமேயத்தைப் பெறுவிக்கின்றார் ஆழ்வார் என்பதாக உய்த்துணரவேணும். இது ஸ்ரீவில்லிபுத்தூர் மங்களாசாஸனப் பாசுரம். இதிலுள்ள வர்ணனை என்னவென்றால்—மின்னிடையாரான பெண்களின் பரந்த கூந்தலில் வண்டு ஆசைகொண்டதாகக் கூறப்படுகிறது. இதிலிருந்து தொனிக்கக்கூடிய பொருள் யாதெனில்; *தூவியம்புள்ளுடைத் தெய்வவண்டென்று (திருவாய்மொழியில்) தெய்வ வண்டாகக் கூறப்பட்ட எம்பெருமான் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியான ஆண்டாளுடைய கூந்தலிலே [அதாவது கூந்தலிலணிந்த மாலையிலே] ஆசைகொண்ட வரலாறு தொனிக்கும்படி காண்க. ஆக, இங்கு, மின்னனைய நுண்ணிடையார்—ஆண்டாள்; அவளுடைய குழல்மேல் நுழைந்தவண்டு—வடபெருங்கோயிலுடையானுகிற தெய்வவண்டு என்றதாயிற்று. ... ... (7)

8. *பொலிந்த முகிற்கன்றுபோலே.*

பெரியாழ்வார் திருமொழியில் 2-7-4. *தெருவின்கண்ணின்று* என்னும் பாசுரத்தில், கண்ணபிரானுடைய வடிவழகுக்கு ஏற்ற உவமை கிடையாமையினால் அபூதோபமை [இல்பொருளுவமை] கூறப்படுகின்றது. *புருவங்கருங்குழல்நெற்றி பொலிந்த முகிற்கன்றுபோலே உருவமழகியநம்பி* என்கிறது. புருவங்களையும் கருநிறமான கூந்தலையும் இவ்விரண்டிற்கும் இடையே நெற்றியையுங்கொண்ட ஒரு மேகக்குட்டியுண்டானால் அதனை உவமை கூறலாமென்றவாறு. ... ... (8)

9. *புண்ணிற் புளிப்பெய்தாலொக்குந்தீமை.*

பெரியாழ்வார் திருமொழி 2-9-1. *வெண்ணெய் விழுங்கி பாசுரத்தில் கண்ணன் தீம்புகள் செய்யும்படிக்கு உவமை கூறப்படுகின்றது—*புண்ணில் புளிப்பெய்தாலொக்குந் தீமை புரை புரையாலிவை செய்யவல்ல......மகனைப்பெற்ற அசோதை நங்காய்! உன் மகனைக் கூவாய்* என்று. புண்ணிலே புளிச்சாற்றை வார்த்தால் பொறுக்கமுடியாதென்பது ப்ரஸித்தம். இதே உபமானத்தை ஆண்டாளும் தமது திருமொழியில் (13-1.) *புண்ணில் புளிப்பெய்தாற்போலப் புறநின்றழகு பேசாதே* என்பதனுற் கூறுகின்றமை காண்க. ஆனால் அது கண்ணபிரானுடைய தீம்புக்கு இட்ட உவமையன்று. ... (9)

10. *செய்த்தலையெழுநாற்றுப்போல்.*

பெரியாழ்வார் திருமொழி (3-7-9.) *செய்த்தலை யெழுநாற்றுப்போலவன் செய்வன செய்துகொள்ள, மைத்தடமுகில் வண்ணன் பக்கல் வளரவிடுமின்களே* என்பது

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸாமான்யமான மொழியன்று. ஜீவாத்மஸ்வரூபத்தை வடிக்கட்டியுணர்த்தும் வார்த்தையிது. முமுக்ஷுப்படியில் திருமந்திரத்தில் நமஸ்ஸின் பொருள் நமது நெஞ்சில் நன்கு பதியும் படியாக அற்புதமான நிரூபணம் செய்தருளும் பிள்ளைலோகாசாரியர் நம: பதார்த்தத்தை நாமுணர்வதற்கு முன்னே நமக்கிருந்த நினைவையும், பின்னே யுண்டாகக் கூடிய திடமான நினைவையும் வகையிட்டுக் காட்டியருளுமிடத்து "ஈச்வரன் தனக்கேயாயிருக்கும், அசித்து பிறர்க்கேயாயிருக்கும்; ஆத்மா தனக்கும் பிறர்க்கும் பொதுவாயிருக்குமென்று முற்பட்ட நினைவு; அங்ஙனன்றிக்கே, அசித்தைப்போலே தனக்கேயாக எனைக் கொள்ள வேணுமென்கிறது நமஸ்ஸால்." என்றுள்ள ஸ்ரீஸூக்தி மிக விலையுயர்ந்தது. அசேதனத்திற்கும் சேதநனுக்கும் வாசியற்றிருக்க வேணுமென்று சிக்ஷிப்பது ஸம்ப்ரதாயத்தில் ஸாரதமமான விஷயம். இங்கு *செய்த்தலை யெழுநாற்றுப்போல்* என்கிற த்ருஷ்டாந்தமானது அந்தச் சீரிய பொருளையே நிலைநாட்டி நிற்கும். செய்—வயல்; செய்த்தலை—வயலிலே யென்றபடி; கழனியில் என்கை. உழவன் தன்னிலத்திலுள்ள நாற்றைத் தன் கருத்துக்கொத்தபடி தான் விநியோகப்படுத்திக் கொள்வதை நாம் காணுகின்றோம். அதுபோல சேதநன் பரமசேதனனுடைய இஷ்ட விநியோகத்திற்கு உரியனாகி அத்யந்த பாரதந்த்ரிய ஸ்வரூபத்தைப் பேணியிருக்கக் கடவனென்றதாயிற்று. இந்த உவமை மற்றவற்றைப் போலன்றிக்கே மர்ம ஸ்பர்சியானதென்று கொள்ளக்கடவது. ... (10)

11. *பருப்பதத்துக்கயல்பொறித்த பாண்டியர் குலபதிபோல்.*

பெரியாழ்வார் திருமொழி 5-4-7. *பருப்பதத்துக் கயல் பொறித்த பாண்டியர் குலபதி போல், திருப்பொலிந்த சேவடி என் சென்னியின் மேல் பொறித்தாய்* என்றவிதில்—எம்பெருமான் ஆழ்வார் திருமுடியின் மீது தன் திருவடிகளைக் கொண்டு நாட்டியருளினதற்கு ஒரு அபூர்வமான உபமானம் காட்டியருளினர். இவ்வாழ்வாருடைய சரிதையிலும் தனியனிலும் பாண்டிய நாட்டரசன் ப்ரஸ்தாவிக்கப் பட்டிருப்பது கொண்டு அவ்வரசனுக்கு ஆழ்வாரிடத்துள்ள மதிப்பும், ஆழ்வார்க்கு அவ்வரசனிடத்துள்ள அன்பும் அறியக் கிடக்கின்றது. பரம ஆஸ்திகனும் ஸ்ரீ மஹாவிஷ்ணு பக்த சிகாமணியுமான அவ்வரசனது புகழைத் தம்முடைய அருளிச்செயலிலும் ஏற்றிவைக்க வேணுமென்று திருவுள்ளங்கொண்ட ஆழ்வார் கீழே (4-2-7.) *கொன்னவில் கூர்வேல் கோன் நெடுமாறன் தென்கூடல் கோன், தென்னன் கொண்டாடுந் திருமாலிருஞ்சோலையே* என்ற பாசுரத்தினால் அவ்வரசன் திருமாலிருஞ்சோலை மலையிலீடுபட்டிருந்த படியை அருளிச் செய்துள்ளார். அவ்விதிஹாஸத்தைக் கூரத்தாழ்வானும் ஸுந்தரபாஹுஸ்தவத்தில் *இதமிமே ச்ருணுமோ மலயத்வஜம் ந்ருபமிஹ ஸ்வயமேவ ஹி ஸுந்தர!, சரணஸாத் க்ருதவாநிதி* என்று பொறித்து வைத்தருளினர். *பருப்பதத்துக் கயல்பொறித்த வென்னுமிப்பாசுரத்தில் கூறப்படும் இதிஹாஸமாவது—பாண்டிய குலத்துத் தலைவனாயிருந்த மலயத்வஜராஜன் தனது நாட்டில் நின்றும் மஹாமேருகிரியளவும் வழியிலுள்ள காடுகளைக் களைந்து பகைவர்களைப் பாற்றித் தனக்கும் தனது பரிஜனங்களுக்கும் நடை எளிதாம்படி பெருவழியாக்கிக்கொண்டு சென்று தனது வெற்றி தோற்றும்படி அம்மேருபர்வதத்தின் சிகரத்தில் தனது மகர கேதுவை நாட்டிப் போயினனென்பதாம். பரம பதத்தை இருப்பிடமாகவுடைய எம்பெருமான் அங்கு நின்றும் இவ்வாழ்வார் பக்கலிலே வருமளவு முண்டான பாவக்காடுகளைப் பாழாக்கியும் விரோதிகளைப் போக்கியும் இவருடைய

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சென்னித்திடரில் பாதவிலச்சினை வைத்ததற்கு இது ஏற்ற த்ருஷ்டாந்தம். பர்வதமென்ற வடசொல் பருப்பத மென்ருயிற்று. கயல்பொறித்த வென்றது. மீன் வடிவமான தனது கேதுவை நாட்டின என்றபடி. ... ... (11)

12. *சீரிய சிங்கம்......போதருமாபோலே.*

திருப்பாவையில் (23.) *மாரிமலை முழஞ்சில் பாசுரத்தில்—கண்ணபிரான் திருப் பள்ளியறையில் நின்றும் துயிலுணர்ந்தெழுந்து சீரிய சிங்காசனத்தளவும் புறப்பாடு கண்டருள்வதற்கு ஒரு பொருத்தமான த்ருஷ்டாந்தம் காட்டப்படுகின்றது. ஸ்ரீராமாயணத்தில் சக்ரவர்த்தி திருமகன் அந்தப்புரத்தில் நின்றும் புறப்பட்டெழுந் தருளினமைக்கு *பர்வதாதிவ நிஷ்க்ரம்ய ஸிம்ஹோ கிரிகுஹாசய:* என்று வான்மீகி முனிவர் கூறின த்ருஷ்டாந்தமே இங்குக் கூறப்பட்டதென்க. ... (12)

13. *மறையவர் வேள்வியில் வகுத்த அவி—நரிபுகுந்து கடப்பதும் மோப்பதுஞ் செய்வதொப்ப.

நாச்சியார் திருமொழி (1-5.) கண்ணபிரானுடைய போகத்திற்காகவே கிளர்ந் தெழுந்த தனது கொங்கைகள் மானிடர்கட்கு உரியனவாக வாய்ப்பேச்சு நிகழ்ந்தாலும் அது தனக்கு அஸஹ்யமாவதோடு ஸ்வரூபஹாநியுமாகுமென்று அருளிச்செய்யாநின்ற ஆண்டாள் இதற்கு ஏற்றதோர் உவமை கூறுகின்ருள்;-*வானிடை வாழுமவ்வானவர்க்கு மறையவர் வேள்வியில் வகுத்தவவி, கானிடைத் திரிவதோர் நரிபுகுந்து கடப்பதும் மோப்பதுஞ் செய்வதொப்ப* என்று. இவ்வுலகில் அந்தணர்கள் நிகழ்த்தும் யாகங்களில் "இந்த்ராய ஸ்வாஹா, ஸூர்யாய ஸ்வாஹா" என்று இத்யாதிகள் சொல்லித் தேவர்கட்கு வகுக்கும் புரோடாசத்தை மிகவும் அற்ப ஜந்துவாகிய ஒரு காட்டு நரி கிட்டிக் காலால் கடந்தும் மூக்கால் மோந்தும் நஷ்டமாக்குவதுபோல—என்றபடி. இதனைப் பிள்ளை லோகாசாரியரும் முமுக்ஷுப்படியில் "தேவர்களுக்கு சேஷமான புரோடாசத்தை நாய்க்கு இடுமாபோலே ஈச்வரசேஷமான ஆத்ம வஸ்துவை ஸம்ஸாரிகளுக்கு சேஷ மாக்குகை" என்பதனுலருளிச்செய்தார். ... ... (13)

14. *உழுவதோரெருத்தினை நுகங்கொடுபாய்ந்து ஊட்டமின்றித் துரந்தாலொக்குமே.*

நாச்சியார் திருமொழியில் (1-9.) *தொழுது முப்போது முன்னடி வணங்கி பாசுரத்தில்—காமதேவனே! கண்ணபிரானையே நான் கணவனுகப் பெறுதற்குறுப்பாக உன்னை நோக்கிச் செய்யும் வழிபாடு விபலமாகக் கூடாது; விபலமாகுமானுல் அஃது உனக்கு நிறக் கேடாகும்; ஓர் உழவன் தனது ஜீவனத்திற்காக எருதினிடத்துப் பரிபூர்ண மாக வேலைகளை வாங்கிக்கொண்டு பின்பு அதற்கு உணவிடாமல் நுகத்தடியால் அடித்துத் தள்ளியோட்டினுல் என்ன பாவம் நேருமோ அது உனக்கு நேருமென்றவாறு. ... (14.)

15. *கட்டியும் கைத்தாவின்னுமையறிதியே.*

நாச்சியார் திருமொழி இரண்டாம் பதிகத்தில் திருவாய்ப்பாடியிலாய்ச்சிகள் கண்ணபிரான் மீது ப்ரணய ரோஷத்தினுல் அங்யபரதை பாவித்துச் சிற்றிலிழைக்க

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வொருப்பட்டிருக்கையில் கண்ணபிரான் அங்குச் சென்று அச்சிற்றிலையழித்துச் சில ச்ருங்கார சேஷ்டிதங்கள் செய்கையில் ஆய்ச்சிகள் தங்களுடைய வெறுப்பைக் காட்டிச் சில பேசுகிறார்கள். கண்ணன் பலாத்காரமாக ஆய்ச்சிகளைத் தீண்டவந்தான்; அப்போது 'ஹரி! ஹரி!; நீ எத்தனை பெண்டுகளைத் தீண்டிவந்தாயோ தெரியாது; எங்களைத் தீண்டாதே கடக்க நில்' என்று வெறுப்புத் தோன்றச் சொன்னார்கள் ஆய்ச்சிகள். அப்போது கண்ணன் திடுக்கிட்டு 'ஆய்ச்சிகளே! தேனும் பாலும் நெய்யுங்கன்னலுமமுதுமாக என்னைச் சொல்லி ரஸித்திருந்த நீங்கள் இப்போது இப்படிச் சொல்லலாமா? என்னை யாரென்று நினைத்தீர்கள்? என்று சொல்லிச் சங்குசக்கரமேந்தின கோலத்தைக் காட்டிப் புன்முறுவல் செய்து நிற்க, அப்போது கோபிகள் சொல்லுகின்றனர். "சுடர் சக்கரங் கையிலேந்தினாய்! கட்டியும் கைத்தால் இன்னாமை யறிதியே கடல் வண்ணனே!" என்று. இங்கு உவமைக்குறி இல்லையாயினும் உபமான வார்த்தையே யாகுமிது. நாக்கு கசத்துப் போனால் கருப்பஞ்சாறும் கைக்கும்' என்பது உலக வழக்கு. அதை இங்கு உவமையாகக் காட்டுகிறபடி. இப்போது எங்கள் நெஞ்சு உன் மீது வெறுப்புக் கொண்டிருப்பதனால் உன்னுடைய போக்யதை எங்கள் நெஞ்சில் படவில்லை யென்றவாறு. ... (15)

16. *விடத்தேளெறிந்தாலேபோல வேதனையாற்றவும்பட்டோம்.*

திருவாய்ப்பாடியில் உள்ள கோபிகள் க்ருஷ்ண விரஹதாபம் தீரச் சுனையாடல் செய்யவேண்டி அவனறியாததொரு பொய்கை தேடிச்சென்று, இடைப்பெண்களாகையாலே ஆடைகளையும் ஆபரணங்களையும் களைந்து கரையில் வைத்திட்டு நீரிலே குடைந்தாடா நின்றார்கள். கண்ணபிரானும் இவர்களுடைய பிரிவையாற்றமாட்டாதே *இருளன்னமாமேனியனான தான் இவர்களுடைய நிழலிலேயேயொதுங்கி அப்பொய்கைக்கே வந்து சேர்ந்து கோபிகள் கரையிலே களைந்துவைத்திருந்த ஆடையாபரணங்களையெடுத்துக் கொண்டு தன் தலையிலும் தோளிலும் தாளிலுமணிந்துகொண்டு குழலூதாநிற்க, 'இவன் நம்மடிபிடித்துவந்தான், நாமும் இவனை மடிபிடித்து வாங்கினோமாகவேணும்' என்றெண்ணின கோபிகள் இவனை இரப்பார் ஏத்துவார் வாழ்த்துவார் தாழ்த்துவார் சீறுவாராய் தாங்கள் நீரிலே நின்று வருந்தும்படியை விரிவாக எடுத்துரைக்கையில் *தடத்தவிழ் தாமரைப் பொய்கைத் தாள்கள் எங்காலைக் கதுவ, விடத்தேளெறிந்தாலேபோல வேதனையாற்றவும்பட்டோம்* என்கிறார்கள். தாங்கள் படும் வேதனைக்கு விஷம்மிக்க தேள் கொட்டிப் படும் வேதனையை ஒப்புச் சொல்லுகிறார்களாயிற்று. ... (16)

17. *நாளுமுயிர்ப்பெய்து கூத்தாட்டுக்காணும்.*

நாய்ச்சியார் திருமொழி 5-2. *வெள்ளை விளிசங்கிடங்கையிற்கொண்ட விமலனெனக் குருக்காட்டான், உள்ளம் புகுந்தென்னை நைவித்து நாளுமுயிர்ப்பெய்து கூத்தாட்டுக்காணும்* என்றவிடத்து உபமானமுரைத்தல் ஸ்பஷ்டமாக இல்லையாயினும் உபமான கர்ப்பமாகவே இது கூறப்படுகின்றது. "என்னை நைவித்து நாளுமுயிர்ப்பெய்து" என்றவிடத்து உறைந்து கிடக்கும் உவமையைக் கேளீர். முற்காலத்தில் ராஜதண்டனைக் குட்படும் குற்றவாளர்கள் முக்கோணங்கட்டி முப்பது அடியடிக்கக் கட்டளையிடப் பெறுவர்கள். சேவகர்கள் அப்படியே கட்டியடிப்பார்கள். பத்தடிபட்டவாறே உயிர் துறக்குந் தருணமாகும். அப்போது அடிப்பதை நிறுத்தி அவனுக்கு மோர்க்குழம்பு

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கொடுத்துத் தேற்றிச் சிறிது ஸூதாரித்தவாறே மீண்டும் கட்டியடிப்பர்கள். மீண்டும் உயிர்போகுந் தருணமானவாறே பழையபடியே தேற்றியடிப்பர்கள். முடியப்போகு முயிரை இடையிடையே போகாமல் காப்பது மேன்மேலும் நலிவதற்காக—என்பது இதனால் அறியப்படும். இதுபோலவே கண்ணபிரானும் போகின்ற என்னுயிரைப் போகாமல் தடுக்க இடையிடையே சூதுசெய்து உயிரைக்கொடுத்து நலிகின்றனென்கிறு ளாண்டாள். ... ... (17)

18. *மென்னடையன்னம் பரந்துவிளையாடும் வில்லிபுத்தூர்.*

நாச்சியார் திருமொழி (5-5.) *மென்னடையன்னமென்னும் பாசுரத்திலும் உவமைக்குறி சிறிதுமில்லையாகிலும் முன்னடிகளிலும் பின்னடிகளிலும் இரண்டு விஷயங்கள் ஆலங்காரிக ஸமயத்தின்படி தோற்றுவிக்கப்படுகின்றன. (1.) முன்னடியில் ஸ்ரீவில்லிபுத்தூரைப்பற்றின வர்ணனையுள்ளது. அங்கு மென்னடையன்னம் பரந்து விளையாடுவதாகச் சொல்லப்படுகிறது. பெரியாழ்வார் தமது திருமொழியில் *மின்னனையநுண்ணிடையார் விரிகுழல்மேல் நுழைந்தவண்டு இன்னிசைக்கும் வில்லிபுத்தூர்* என்ற பாசுரத்திறல் ஆண்டாளுடைய சரிதையொன்றை ஸூசிப்பித்ததுபோல, இங்கு ஆண்டாள் *மென்னடையன்னம் பரந்து விளையாடும் வில்லிபுத்தூர்* என்பதனால் பெரியாழ்வார் பெருமையை ஸூசிப்பிக்கின்றாள். ஆசார்ய ஹ்ருதயத்தில் ஹம்ஸத்திற்கு ஸ்வாபதேச மருளிச்செய்யுமிடத்து "விவேகமுகராய் நூலுரைத்து......" என்று தொடங்கி "நயாசலன் மெய்ந்நாவன் நாதயாமுனர் போல்வாரை அன்னமென்னும்" எனப்பட்டது. இதில் **நயாசலன்** என்றது—*நளிர்ந்த சீலன் நயாசலன்* என்று ஆழ்வார் தாமே புகழ்ந்த செல்வநம்பியை; **மெய்ந்நாவன்** என்றது *மெய்ந்நாவன் மெய்யடியான் விட்டு சித்தன்* எனப்பட்ட பெரியாழ்வாரை. எம்பெருமான் ஹம்ஸாவதாரமெடுத்து மறைபயந்தாப் போலே *ப்ராஹ வேதாந் அசேஷாந்* என்றும் *வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்* என்றும் சொல்லுகிறபடியே வேதப்பொருளை விரித்துரைத்த இவரும் ஹம்ஸமென்னத் தகுதியுடையவர். [விளையாடும்] *க்ரீடார்த்தமபி யத் ப்ருயுஸ் ஸ தர்ம: பரமோ மத:* என்கிறபடியே விளையாட்டாகவே பரம தர்மங்களை வெளியிட்டபடியைச் சொன்னவாறு. இப்படிப்பட்ட பரமஹம்ஸ மஹநீயர் அவதரித்தவிடம் வில்லிபுத்தூரென்ற தாயிற்று. (2) பின்னடிகளில் குயிலே! என்று குயிலை விளித்து *என் கோலக்கிளியை உன்னொடு தோழமைக் கொள்ளுவன்* என்று சொல்லியிருப்பதை ஆழ்ந்து நோக்க வேணும். குயிலுக்கும் கிளிக்கும் நட்புகொள்விப்பதாகக் கூறுவதன் கருத்து ஆராயப்பட வேண்டும். குயிலென்றது—வால்மீகி மஹர்ஷியை; கிளி யென்றது சுகமஹர்ஷியை. *கூஜந்தம் ராம ராமேதி* என்னும் வான்மீகி தனியனில் *வந்தே வால்மீகி கோகிலம்* என்று அவர் குயிலாகச் சொல்லப் பட்டிருக்கிறார். சுகமஹர்ஷியின் பெயரே அவரைக் கிளியென்று காட்டுகிறது. வால்மீகி முனிவர் ராமகதாரஸிகர்; சுகர் க்ருஷ்ண கதாரஸிகர்; இவ்விருவர்க்கும் தோழமை கொள்விப்பதாவது ராமன் கதையையும் க்ருஷ்ணன் கதையையும் ஒருங்கேயுகக்கும்படி செய்வதாம். ஆண்டாள் கண்ணனை விளித்து அவன் கதையையும் சொல்லுவள், ராமன் கதையையும் சொல்லுவள். *குதிகொண்டரவில் நடித்தாய்* என்றதுபோலே *வில்லாலிலங்கையழித்தாய்* என்றும் சொல்லுவள். *தென்னிலங்கை செற்றாய்! திறல் போற்றி* என்றதும் *பொன்றச்சகடமுதைத்தாய் புகழ்போற்றி* என்பள்.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

புள்ளின்வாய்கீண்டானை என்றதும்; *பொல்லாவரக்கனைக் கிள்ளிக்களைந்தானை* என்பள். இங்ஙனே தான் கொண்ட ஒற்றுமை நயத்தையே குயில் கிளிகளுக்கு ஆக்குவித்த நட்பாக நவின்றருளாயிற்று. இங்கு அந்தர்க்கதோபமையென்று கொள்க. ... (18)

19. *செங்கமலநாண்மலர்மேல் தேனுகருமன்னம்போல்.

நாச்சியார் திருமொழியில் (7-7-) வாசுதேவனுடைய அங்கைத்தலமேறி அன்ன வசஞ்செய்யும் சங்கரையனுக்கு—செங்கமலநாண்மலர்மேலுறையுமன்னம் உவமையாகக் கூறப்பட்டது. கண்ணபிரானுடைய செவ்விய திருக்கைத்தலத்திற்குச் செந்தாமரை மலரும், அக்கையிலுள்ள வெண்ணிறமான சங்குக்கு வெண்மையான ஹம்ஸமும் உபமானமாகக் கூறப்பட்டது. இதில் பரபாக சோபாநுபவமுமுள்ளது. கூரத்தாழ்வான் ஸுந்தரபாஹுஸ்தவத்தில் *ஸ்ரீமத்வநாத்ரி பதிபாணிதலாப்ஜயுக்மம்* என்கிறச் லோகத்தில் "விமலசங்க:-அப்ஜமாச்ரித இவோத்தமராஜஹம்ஸ:" என்றருளிச்செய்தது இப்பாசுரத்தைத் தழுவியே. ... ... (19)

20. மாலிருஞ்சோலையில் கொன்றைகள்மேல் தூங்கு பொன்மாலைகளோடுடனாய் நின்று தூங்குகின்றேன்.

நாச்சியார் திருமொழி-9, 9, *கோங்கலரும்பொழில்* என்கிற பாசுரத்தில் முன்னடிகளின் கருத்து மிகவும் ஆழ்ந்தது. ஆண்டாள் தன்னுடைய நிலைமைக்குத் திருமாலிருஞ் சோலையில் கொன்றைமரங்களில் புஷ்பித்த புஷ்பங்களினுடைய நிலைமையை ஒப்புச் சொல்லுகின்றாள். இதற்கும் அதற்கும் எங்ஙனே ஸாம்யமென்னில்; கேண்மின். திருமாலிருஞ் சோலைமலையில் ஸாத்விகபுருஷர்கள் ஏறிப் போவர்களேயன்றி ராஜஸதாமஸ புருஷர்கள் ஏறிப் போகமாட்டார்கள். கொன்றைமலர்கள் சிவன் முதலிய தேவதாந்தரங் களின் ஆராதனைக்குமட்டும் உபயோகப்படக்கூடியவையாதலால் அவை ராஜஸதாமஸ புருஷர்களுக்கே உபாதேயமாகின்றபடியால் ஸாத்விகபுருஷர்களுக்கு அவைகொண்டு காரியமில்லை. ஆக ராஜஸதாமஸ புருஷர்கள் புகுமிடமல்லாத திருமாலிருஞ்சோலைமலையில் மலர்கின்ற கொன்றைகள் பறிப்பாரில்லாமல் அங்கே மலர்ந்து அங்கே உதிர்ந்துபோவதொழிய வேறோருபயோகமும் அவற்றுக்கில்லையாயிற்று. ஆகவே அம்மலர்களின் ஜன்மம் எப்படி வீணோ அப்படியே என் ஜன்மமும் வீணாயிற்றே யென்கிறாளாண்டாள். உபயோகமற்ற தன்மையில் ஸாம்யம் விவக்ஷிதமென்க. திருமங்கையாழ்வார் பெரிய திருமடலில் "கன்னவிலுங்காட்டகத்தோர் வல்லிக்கடிமலரின், நன்னறுவாசம் மற்றறொருனுமெய்தாமே, மன்னும் வறுநிலத்து வாளாங்குகுத்ததுபோல், என்னுடைய பெண்மையும் என்னலனு மென்முலையும், மன்னுமலர்மங்கைமைந்தன், கணபுரத்துப் பொன்மலைபோல் நின்றவன்தன் பொன்னகலம் தோயாவேல், என்னிவைதான் வாளாவெனக்கே பொறையாகி" என்றருளிச்செய்ததும் இங்கு ஒப்புநோக்கத்தக்கது. ... ... (20)

21. அழுங்குழவியதுவே போன்றிருந்தேனே.

பெருமாள் திருமொழியில் ஐந்தாவது திருமொழியாகிய *தருதுயரம் தடாயேல் பதிகத்தில் நிகமனப்பாசுரமொன்று நீங்கலாக மற்றையொன்பது பாசுரங்களிலும் ஆழ்வார்

3

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தம்முடைய அநந்யகதித்வத்திற்கு ஒவ்வோருபமான மநுஸந்திக்கிறார். [*அரிசினத்தாலீன்றதாய் அகற்றிடினும் மற்று அவள்தனருள் நினைந்தேயழுங்குழவியதுவே போன்றிருந்தேனே.*] தாயானவள் குழந்தையின்மீது கடுங்கோபங்கொண்டு அதை அடித்துதைத்துத் தள்ளினாலும் அக்குழந்தையானது தாயொழிய வேறுபுகலில்லையென்றறிந்து பின்னையும் அவளுடைய காலையே கட்டிக்கொண்டு அழுவதுபோல-என்கிற உபமானம் இங்குக் கூறப்பட்டது. தமக்கு எம்பெருமான் துக்கங்களைப் போக்காமல் மேன்மேலும் வளரச்செய்தாலும் அவனது திருவடியொழியத் சஞ்சமில்லையென்பதற்கு இது ஏற்ற உவமை. ஆளவந்தார் தமது ஸ்தோத்ரரத்னத்தில் *நிராஸகஸ்யாபி ந தாவதுத்ஸஹே மஹேச! ஹாதும் தவ பாதபங்கஜம், ருஷா நிரஸ்தோபி சிசுஸ் ஸ்தநந்தயோ ந ஜாது மாதுச் சரணௌ ஜிஹாஸதி.* என்கிற சுலோகத்தை இந்தப்பாசுரத்திற்கு ப்ரதிச்சந்தமாகவேயருளிச்செய்தார். ... ... (21)

22. கொண்டானையல்லாலறியாக் குலமகள்போல்

அதற்கடுத்த இரண்டாம் பாசுரத்தில் *கண்டாரிகழ்வனவே காதலன்தான் செய்திடினும், கொண்டானையல்லால் அறியாக் குலமகள்போல்* என்கிற உபமானம் கூறப்பட்டது. நற்குலப்பிறப்பும் நன்னடையொழுக்கமுமற்ற தீயபெண்டுகள் தங்களுக்குக் கணவன் எவ்வளவு இனிமையான காரியங்களைச்செய்து போந்தாலும் அவனை ஒரு புருஷனாகமதியாமல் வெறுத்து க்ஷுத்ரஸுகத்தைநாடி அயற்புருஷனைத் தேடியோடுவர்கள்; நற்குலத்திற்பிறந்த நல்ல பெண்ணோவெனில், தனக்குக் கணவன் ஜுகுப்ஸிக்கத்தக்கதாக எவ்வளவு ஹிம்ஸைகளைப் பண்ணினபோதிலும் எதிரில் வாய் கூடத் திறவாமலும் வேறுகதியை நாடாமலும் முன்பு அவன் செய்த உபகாரத்தையே நினைத்து மற்றும் அவனால் உதவியைப்பெறநாடி அவன் காற்கீழே விழுந்து கிடப்பள்—அதுபோல, பற்பலரும் உனது நிர்ஹேதுகஸ்வீகாரத்தையும் உதறித் தள்ளிவிட்டு க்ஷுத்ரபலன்களை விரும்பி க்ஷுத்ர தேவதாந்தரங்களை நாடியோடினாலும், பிரானே! நீ என்பக்கல் நிர்ஹேதுகநிக்ரஹம் பண்ணினாலும் உன்னையல்லது வேறொரு புகலிடமறியேனென்றாராயிற்று. ... ... (22)

23. தார்வேந்தன் கோல்நோக்கி வாழுங் குடிபோன்றிருந்தேனே.

அதற்கடுத்த மூன்றும் பாசுரத்தில் *தான் நோக்காது எத்துயரம் செய்திடினும் தார்வேந்தன் கோல்நோக்கி வாழுங் குடிபோன்றிருந்தேனே* என்றது. குடிமக்களைப் பாதுகாப்பதற்கென்றே தனிமாலையிட்டிருக்குமவனான தலைவன் தன் கடமையைச் செய்யாதபொழுது குடிமக்கள் செய்யக்கூடியது அவனுடைய அருள் எப்படியாவது தங்கள்மீது ப்ரஸரிக்கும்படி வேண்டிக்கொள்ளுதலேயன்றி வேறெதுவும் செய்யலாவதில்லை. அவ்வாறே அடியார்களைக் கடாக்ஷிப்பதற்கென்றே திருநாட்டைவிட்டுத் திருவித்துவக் கோட்டிலே வந்து தங்கியிருக்கிற நீ பயனெடுத்து வந்ததன்பயனைப் பெறாவிடினும் நான் என்னுடைய அநந்யகதித்வத்தைக் குலைத்துக்கொள்ளமாட்டேனென்றதாயிற்று. ... ... (23)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

24. மருத்துவன்பால் மாளாத காதல் நோயாளன்போல்.

வைத்யோ நாராயணோ ஹரி: என்றும் *மருத்துவனாய் நின்ற மாமணிவண்ணா* என்றும் சொல்லியிருக்கிறபடி எம்பெருமானை மருத்துவனாக வைத்துப் பேசுகிறதிங்கு. ஸம்ஸாரமாகிய கொடிய நோயைத் தொலைப்பதற்கு ஏற்ற வைத்யன் ஸ்ரீமந்நாராயணனே யென்பது நூற்கொள்கை. மருத்துவன் வாளாலறுப்பதும் நெருப்பினால் சுடுவதும் முதலான கொடிய செய்கைகளைச் செய்தாலும் இவை நோய் தீருவதற்காக ஹிதபுத்தியினால் செய்யுமவையேயல்லது கடுநெஞ்சினாற் செய்பவையல்லவென்று துணிந்து நோயாளன் அந்த மருத்துவன்பக்கல் அன்பையே செலுத்துவதுபோல எம்பெருமான் நமக்குத் தீங்குகள் செய்தாலும் ஹிதபுத்தியினாற் செய்யுமவையேயென்று கொண்டு வெறுப்பற்றிருக்கையே ப்ரபன்னர்க்கு உற்றது என்று சிக்ஷிக்கிறபடி. *ஹரிர் து:க்காநி பக்தேப்யோ ஹிதபுத்த்யா கரோதி வை, சஸ்த்ரக்ஷாராக்நி கர்மாணி ஸ்வபுத்ராய யதா பிதா* என்றார்கள் மஹர்ஷிகள். அருளாளப்பெருமாளெம்பெருமானார் ஞானசாரத்தில் *ஆரப் பெருந்துயரே செய்திடினுமன்பர்கள்பால், வேரிச் சரோருகைகோன் மெய்ந்நலமாம்-தேரில், பொறுத்தற்கரிய தெனினும் மைந்தனுடற்புண்ணை, அறுத்தற்கிசை தாதையற்று.* என்று பணித்ததும் இங்கு நினைக்கத்தக்கது. ... ... (24)

[மேற்பாசுரங்களிலுள்ள உபமாநநிர்தேசங்களும் குறிக்கொள்ளத்தக்கன.]

25. தடங்கடல் தன்னுளே திரைத்தெழுந்தடங்குகின்ற தன்மைபோல்.

திருச்சந்த விருத்தத்தில் (பா. 10) *தன்னுளே திரைத்தெழும் தரங்கவெண் தடங்கடல், தன்னுளே திரைத்தெழுந்து அடங்குகின்ற தன்மைபோல், நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும், நின்னுளேயடங்குகின்ற நீர்மை நின்கணின்றதே* என்பதில் விலக்ஷணமான வொருத்ருஷ்டாந்தம் காட்டப்பட்டுள்ளது. அலையெறிதல் ஓய்ந்துகிடந்த கடலானது காற்று வீசுதலினால் எங்கும் அலையெறியப்பெற்று, மீண்டும் காற்று ஓய்ந்தவாறே அந்த அலையெறிதல் அடங்கிக் கடலானது சாந்தமாவதுபோல என்று முன்னடிகளில் உவமையுள்ளது. இதற்கு உபமேயம் ஏதென்னில்; வேதாந்தப்ரக்ரியையிலே சொல்லுகிறது. பகவத்ஸ்வரூபத்தைக் கடலாகவைத்து பகவத் ஸங்கல்பத்தைக் காற்றின் ஸ்தானத்திலே வைத்துக் கூறுவது. காற்று அசையாதபோது கடல் சாந்தமாயிருப்பது போல பகவத்ஸங்கல்பமில்லாதபோது பகவத்ஸ்வரூபம் சாந்தமாயிருக்கும். அதாவது என்னவென்னில்; *பஹு ஸ்யாம் ப்ரஜாயேய* என்கிற ஸங்கல்பமுண்டானபோது ஸ்தாவரஜங்கமாத்மகமான ப்ரபஞ்சங்கள் தோன்றுதலும் பின்பு அழிதலுமான அவஸ்தைகளையடைந்து கடைசியாக *தம: பரே தேவ ஏகீபவதி* என்றபடி எம்பெருமானளவில் உபஸம்ஹாரமடைந்து நிற்குமென்றபடி. ... ... (25)

26. *புறஞ்சுவர் கோலஞ்செய்து புள்கவ்வக் கிடக்கின்றீரே*

திருமாலையில் (பா. 6.) *மறஞ்சுவர் மதிளெடுத்து* என்பதில் *புறஞ்சுவர் கோலஞ் செய்து* என்றது உபமாகர்ப்பமான ஸ்ரீஸூக்தி. *அஸந்நேவ ஸ பவதி. அஸத் ப்ரஹ்மேதி வேத சேத்* என்ற உபநிஷத்தின்படி ஆத்மவஸ்து பாழ்த்துக்கிடக்க, அவ்வாத்மவஸ்துவை

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸந்தமேநம் ததோ விது: என்னும்படி ஸத்தாக்குகிற வழியிலே ஒரு முயற்சி செய்யாமல் இன்னடிசிலுண்பதும் பொன்னுபரணம் பூண்பதும், பூந்துலகில் சாத்துவதுமாய் நீங்கள் சரீரத்திற்குச் செய்கிற கோலங்கள் சவாலங்காரத்தோடும் விதவாலங்காரத்தோடும் ஒக்கு மென்றவாறு. ஆக, புறஞ்சுவர் கோலஞ் செய்து என்றது—இன்று விழுமோ, நாளை விழுமோ' என்று வியாகுலப்படும்படி க்ஷணபங்குரமான மண்சுவர்க்கு மாணிக்கப்பட்டையடிப்பதுபோல, நச்வரமான இந்தப் பாழும் சரீரத்தைப் பூண் கட்டிக்கொள்ளப் பார்ப்பது—என்னும் விவக்ஷையினுலாதலால் உவமை உள்ளுறைந்து கிடக்கிறதென்றுணர்க. ... ... (26)

27. *காம்பறத் தலைசிரைத்து உன்கடைத்தலையிருந்து வாழுஞ்சோம்பரை.*

திருமாலையில் (பா-38) *மேம்பொருள் போகவிட்டென்கிற பாசுரத்தில் ஈற்றடியில் *வாழுஞ்சோம்பரை ப்ரஸ்தாவித்து அவர்களுக்கு நிருபகமாக *காம்பறத்தலைசிரைத்து* என்றும் *உன்கடைத்தலையிருந்துவாழும்* என்றும் இரண்டு விஷயங்களை யருளிச்செய்கிருர் தொண்டரடிப்பொடியாழ்வார். இங்கு *காம்பு அறத் தலைசிரைத்து* என்பதில் உவமைக்குறி யொன்றுமில்லையாயினும் உபமானமாகவே அது கொள்ளப்படவேண்டும். தலைமயிரின் அங்குரங்கூட கைக்குத் தட்டாதபடி ஸமூலமாக வபனம் செய்வித்துக் கொள்வதுபோல—என்கிற உவமை இங்கு விவக்ஷிதம் உபாயாந்தரங்களிலும் உபேயாந்தரங்களிலும் ஸ்வல்பமான பற்றும் இல்லாதபடி, எம்பெருமானுருவனே ப்ராப்யனென்கிற அத்யவஸாயமும், அவனைப் பெறுவதற்கு அவனருளே ஸாதனமத்தனையல்லது நாம் செய்யும் க்ரியாகலாபங்களொன்றும் ஸாதனமல்ல என்கிற திடமான அத்யவஸாயமுங் கொண்டு இவ்விரண்டத்யவஸாயமும் ஒருபோதும் குலையாதபடிக்குத் திருவாசற்கடையிலே விழுந்துகிடக்கும் பரமைகாந்திகளே இங்கு வாழுஞ்சோம்பராகக் கருதப்பட்டவர்கள். அவர்களது நிலைமைக்குக் காம்பறத் தலைசிரைத்தல் உவமையாகக் கருதப்பட்டதென்றுணர்க. — ... ... (27)

முதலாயிரத்திலிருந்து உபமானஸங்க்ரஹணம் முற்றிற்று.

இனி பெரிய திருமொழியாயிரத்திலிருந்து

28. *ஊமனுர்கண்ட கனவிலும் பழுதாயொழிந்தன நாள்கள்.*

பெரிய திருமொழி 1-1-3. *சேமமே வேண்டியென்னும் பாசுரத்தில் *ஊமனுர் கண்ட கனவிலும் பழுதாயொழிந்தன கழிந்த அந்நாள்கள்* என்பதில் உவமைக்குறி இல்லையாயினும் 'எனது வாழ்நாள்கள் ஊமைகண்ட கனவுபோலே பழுதேயொழிந்தன' என்று ஊமை கனவை உவமையாக்கிச் சொல்லுவதே விவக்ஷிதம். உலகில் அவரவர்கள் காணும் கனுக்களுக்குப் பயனென்றுமில்லை; ஆனாலும் 'இங்ஙனே நான் கனுக்கண்டேன்' என்று நால்வரோடு கூறுவதனுலுண்டாகும் மகிழ்ச்சியைப் பயனுகக் கொள்ளலாம். இது வாக்கினுலே வியவஹரிக்க வல்லமையுடையார்க்கே. ஊமையாகப் பிறந்தவர்கள் கனுக் கண்டால் பிறரோடு சொல்லிக் களிப்பதற்கும் ஆஸ்பதமில்லையாயிற்று. ஆகவே ஊமை கண்ட கனுப்போல வியர்த்தமாகக் கழிந்தன என்னுள்கள் என்றதாயிற்று. ஊமையர்க்கு

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வாய்விட்டுச் சொல்லிக்கொள்ள முடியாமற்போனாலும் தம் நெஞ்சினுள்ளேயாகிலும் நினைத்திருந்து மகிழக்கூடும்; அப்படி நினைத்துத் தம்முள்ளே மகிழக்கூடிய விஷயமும் ஒன்றில்லாமையாலே அதனிலுங்காட்டில் பழுதே யொழிந்ததென்றது. ... (28)

29. *வானவர் தங்கள் சிந்தைபோல*

பெரிய திருமொழி இரண்டாம் பத்தின் முதற்பாட்டு *வானவர் தங்கள் சிந்தை போல* என்று தொடங்குவது. நித்ய ஸூரிகளின் திருவுள்ளம்போல வென்பது இதன் பொருள். இந்த உபமானத்திற்கு எதில் அந்வயம்? என்று பார்க்கில் ஸந்நிஹிதாந்வயம் கொண்டால் இரண்டாமடியிலேயே அந்வயிக்கும். வ்யவஹிதாந்வயம் கொண்டால் ஈற்றடியில் அந்வயிக்கும். மாதவமானவர் தங்கள் சிந்தையிலே வானவர் தங்கள் சிந்தையிற்போல அமர்ந்துறைகின்றானெம்பெருமான் என்பது ஸந்நிஹிதாந்வயத்தினால் பெறும் பொருள். மாதவமானவரென்றது—மஹாபாக்யசாலிகளென்றபடி. அன்னவர்களது நெஞ்சிலே நித்யஸூரிஹ்ருதயத்திற்போல இனிது உவந்து அமர்ந்துறைகின்றானென்றதாயிற்று. இனி வ்யவஹிதாந்வயங்கொள்ளில்; என்னெஞ்சே! நீ வானவர் தங்கள் சிந்தைபோலத் திருவேங்கடமுடையானுக்கு அடிமைத்தொழில் பூண்டாயே என்றபடியாம். மனமே! இவ்விருள்தருமா ஞாலத்திலே பிறந்த என்னுடைய நெஞ்சாக நீயிருந்தும் இந்த மண்ணோருடைய நெஞ்சு எப்படி தீய விஷயங்களையே சிந்தை செய்கிறதோ அப்படி நீ விஷயாந்தரங்களைச் சிந்தியாமல் ஒருநாளும் ஸம்ஸார நாற்றமே கண்டறியாத நித்யஸூரிகளின் நெஞ்சுபோல திருவேங்கடமுடையான் திறத்திலே அடிமைத் தொழிலை ஏற்றுக்கொண்டாயே! உன்னுடைய பாக்கியமே பாக்கியம்! என்று தம் திருவுள்ளத்தைக் கொண்டாடினபடி. வ்யவஹிதாந்வயமெனினும் இதுவே ஆழ்வார்க்கு விவக்ஷிதம். ... ... (29)

30. *பிச்சச் சிறுபீலி பிடித்துலகில் பிணந்தின் மடவாரவர்போல்*

பெரிய திருமொழி 2. 4. 8. *பிச்சச்சிறுபீலி பிடித்தென்று தொடங்கும் பாட்டிலே ஜைனர்களுக்குப் பிசாசஸ்த்ரீகளை உவமை கூறியிருக்கின்றது. ஜீவஹிம்ஸை செய்யலாகாதென்கிற நூற்கொள்கையிலே ஜைனர்கள் மிக்க ஊற்றமுடையராதலால் தரையில் நடக்கும்போது பூச்சிகளும் புழுக்களும் காலில் மிதிபட்டு முடிந்துபோகுமென்று ஜீவஹிம்ஸைக்கு வெருவி மயிலிறகுகளை விளக்குமாறாகக் கட்டிக் கையிலேகொண்டு தரையை மெதுவாக விளக்கிக்கொண்டே நடந்து செல்லுவர்கள். *பிச்சச்சிறுபீலி பிடித்து* என்பதனால் இது சொல்லப்படுகிறது. அவர்கள் திகம்பரச்சாமிகளாய்த்திரிவதுமுண்டாதலால் "பிணந்தின் மடவாரவர்போல் அச்சமிலர் நாணிலர்" என்றது. பிணங்களைப் பிடுங்கித் தின்கிற பிசாசுகள் வெட்கமும் அச்சமுமின்றியே துணியில்லாமல் திரிவதுபோலத் திரிகின்றனராம் ஜைனர்கள். ... ... (30)

31. *குவளையங்கண்ணி கொல்லியம்பாவை*

பெரிய திருமொழியில் 2-7-1. *திவளும் வெண்மதியென்கிற பாசுரத்தில் (தாய் பாசுரமானவிதில்) பரகாலநாயகி *கொல்லியம்பாவை* எனப்படுகிறாள். இங்கு உவமைக்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

குறி இல்லையாயினும் 'கொல்லிப்பாவை போன்றவள்' என்றே பொருள்படுதலால் உபமா கர்ப்பமேயாகுமிது. 'வல்வில்ஓரி' என்னும் சிற்றரசனுக்கு உரியதாய்க் கொல்லியென்னும் பெயர் கொண்டதான மலையின்கணுள்ள ஒரு பெண்பாற் பிரதிமை கொல்லிப்பாவை யென்று பிரசித்திபெற்றது. இது தேவ சிற்பியால் அமைக்கப்பட்ட அழகிற்சிறந்த பதுமையாம். அம்மலையிலுள்ள தேவரையும் முனிவரையும் துன்புறுத்த வருகின்ற அசுரரும் அரக்கரும் இப்பதுமையின் சிரிப்பைக்கண்டு மயங்கி உயிர் துறப்பர்களாம். அசுரரும் அரக்கரும் அங்கு அணுகும்போது அவர்களது வாடைபட்டவுடன் இது தானே நகைசெய்யுமாறு பொறியுள் வைக்கப்பட்டதென்பர். இது நகைத்துக் கொல்லுமென்பது "திரிபுரத்தைச், செற்றவனும் கொல்லிச் செழும்பாவையும் நகைக்கக், கற்றதெல்லாமிந்த நகை கண்டேயோ?" என்ற சித்திரமடற் பாடலினுல் விளங்குகின்றது. இப்பாவை கண்டாருள்ளமும் விழியும் கவர்ந்து பெருங்காமவேட்கையுறுவித்து இறுதியில்கொல்லு மென்றுங்கூறுவர். இது தெய்வ நிர்மாணமென்பர். ஒருகாலத்தில் திருமகள் தன்முன் போர்க் கெழுந்த அவுணர் மோஹித்து விழும்படி இக்கொல்லிப்பாவையுருக்கொண்டு ஆடினள் என்று சிலப்பதிகாரம் கூறும். "செருவெங்கோல மவுணர்நீங்கத் திருவின் செய்யோ ளாடிய பாவையும்" (கடலாடு காதை 60, 61.) என்றது காண்க. (இதைப்பற்றின மற்றும் விவரணங்கள் அடியேனுடைய திவ்யார்த்ததீபிகையுரையிற் காண்க. ... (31)

32. *அலைகடல் போன்றிவரார்கொலென்ன அட்டபுயகரத்தேனென்றூரே.*

பெரிய திருமொழியில் (பா. 2-8-5)ல் எம்பெருமானுக்குக் கடலை உவமையாகச் சொல்லியுள்ளது. கடல்வண்ணனென்று பலபலவிடங்களிற் சொல்லியிருந்தாலும் இவ்விடத்திற்கு நெடுவாசியுண்டு; கடலோடு ஸாம்யத்தை ஆழ்வார் தாமே மூலத்தில் உபபாதித்தருளியிருத்தலால். அஃது எங்ஙனேயென்னில்; *நீண்ட மலைகளும் மாமணியும் மலர்மேல் மங்கையும் சங்கமும் தங்குகின்ற அலைகடல் போன்றிவர்* என்று மூலமுள்ளது. கடலின் நிறம்போன்ற நிறமுடையவன் என்பதனுலாகும் ஸாம்யமொன்று உண்டானுலும் இங்குச் சொல்லுகிறது அதுவன்று. கடலிலுள்ள வஸ்துக்களெல்லாம் எம்பெருமானிடத்துமுள்ளமைபற்றின உவமை சொல்லப்படுகிறது. முன்னொருகாலத்தில் மலைகளெல்லாம் சிறகுடனே பறந்து நாடுநகரங்களுக்குத் துன்பம் விளைத்துக்கொண்டிருக்கையில் இந்திரன் தனது வஜ்ராயுதத்தினுல் அவற்றின் சிறகுகளைத் துணித்துக்கொண்டுவர அப்போது மைனுகம் முதலிய பலமலைகள் கடலினுட்சென்று ஒளிந்துகொண்டு இற்றைக்கும் அவ்விடத்திலேயே தங்கிக்கிடக்கின்றனவென்று நூல்கள் கூறும். எம்பெருமானுடைய திருத்தோள்கள் *ஈரிரண்டுமால்வரைத் தோள்* என்றும் *குன்றுருந்திரடோளன்* என்றும் சொல்லுகிறபடியே மலைபோன்றிருத்தலால் கடலும் மலைகளையுடையது, எம்பெருமானும் மலைகளையுடையன் என்னலாயிருந்தது. கடல் ரத்னுகரமாகையாலே மாமணிகளையுடையது; எம்பெருமானும் 'குருமாமணிப்பூண்' என்னப்பட்ட ஸ்ரீகௌஸ்துபத்தையுடையவன். கடலைக்கடைந்தபோது அதில் நின்றும் பிராட்டி பிறந்தனளென்று புராண வரலாறுதலால் மலர்மேல்மங்கை தங்கப்பெற்றது கடல். எம்பெருமான் *அகலகில்லே னிறையுமென்று அலர்மேல்மங்கை யுறைமார்பன். சங்குக்கு உறைவிடம் கடல். எம்பெருமான் இடங்கைச் சங்குமுடையான். ஆகவே அலைகடல் போன்றவனுயினன் என்று ஆழ்வார் தாமே நிருபித்தருளினர். ... (32)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

33. "ஆய்ச்சியுரலோடார்க்கத் தறியார்ந்த கருங்களிறே போலநின்று."

பெரிய திருமொழி 2-10-6. "உறியார்ந்த நறுவெண்ணெயென்னும் பாட்டில் வெண்ணெய் களவு செய்த குற்றத்திற்காக யசோதைப் பிராட்டியால் உரலோடு பிணைத்துக் கட்டிவைக்கப்பட்ட கண்ணன் அழுது அலமந்திருந்தபடிக்கு உவமை கூறுகின்றாராழ்வார் "தறியார்ந்த கருங்களிறே போல நின்று தடங்கண்கள் பனிமல்குந் தன்மையானே" என்று. தறி—யானைகட்டும் கம்பம்; உரலைத் தறியாகவும், கண்ணபிரானைக் கருங்களிறாகவும் கூறினபடி. வேதாந்தவாசிரியர் இப்பாசுரத்தை யடியொற்றியே யாதவாப்யுதயத்தில் (4-36.) "ஸஹாஸமைக்ஷந்த ஜநாஸ் ஸமந்தாத் ஆலாநிதம் நாகமிவா நபிஜ்ஞா:" என்று பணித்தார். ... ... (33)

34. "நீலத்தடவரை மாமணி நிகழக் கிடந்ததுபோல்"

பெரிய திருமொழி 3-5-2. "நீலத்தடவரையென்று தொடங்கும் பாட்டில்—நீலநிறத்ததொரு மலையின்மேலே மாமணி விளங்குவதுபோலத் திருப்பாற்கடலில் அரவணை மேற் கிடந்தாய் என்கிறது. இதில், நீலமலையின் ஸ்தானத்திலே எம்பெருமானையும், மாமணியின் ஸ்தானத்திலே ஸ்ரீகௌஸ்துப மணியையும் உபமேயமாகக் கொள்ளவேணும். கொண்டால் 'அரவணை வேலைத்தலை' என்ற வாக்கியத்திற்கு உபமேயகோடியில் அந்வயமில்லையாகும். அந்வயம் கொள்ளவேணுமாகில், எம்பெருமானுடைய கரிய திருமேனியின் நிழலிட்டாலே பாற்கடலும் பாம்பணையும் நீலநிறம் பெற்றனவென்று கொண்டு பாற்கடற் பாம்பணையை நீலத்தடவரைக்கு உபமேயமாகவும், எம்பெருமானை மாமணிக்கு உபமேயமாகவுங் கொள்ளலாம். இந்த யோஜநையில்—"அபி பணிபதிபாவாத் சுப்ரம், அந்தச் சயாலோர் மரகதஸுகுமாரை: ரங்கபர்த்துர் மயூகை:, ஸகல ஜலதிபாநச்யாம ஜீமூத ஜைத்ரம் புலகயதி விமாநம் பாவனம் லோசநே ந:" என்கிற ஸ்ரீரங்கராஜஸ்தவ சுலோகம் நினைக்கத் தகும். ஸ்ரீரங்க விமானத்தை வருணிக்கிற இந்த சுலோகத்தில் சொல்லப்படுவதாவது—திருவனந்தாழ்வானே ஸ்ரீரங்க விமானமாக வடிவெடுத்திருப்பதனால், திருவனந்தாழ்வான் வெண்ணிறமுடையனுதலால் இந்த விமானமும் வெண்ணிறமுள்ளதாகக் காணப்படவேண்டும்; ஆனுல் கருங்கடலை முற்றும் பருகியெழுந்த காளமேகத்தையும் வென்று மிகவும் கறுத்து விளங்குகின்றது; (இது எதனுலென்னில்;) உள்ளே திருக்கண் வளர்ந்தருளும் திருவரங்கநாதனது நீலமேனியொளியின் வ்யாப்தியினுல்—என்று. ... ... (34)

35. "சிலம்பினிடைச் சிறுபரல்போல் பெரியமேரு திருக்குளம்பில் கணகணப்ப."

பெரிய திருமொழி 4-4-8. "சிலம்பினிடையென்று தொடங்கும் பாட்டில்—எம்பெருமான் மஹாவராஹமூர்த்தியாகி அண்டபித்தியிற் சார்ந்துகிடந்த பூமிப் பிராட்டியை அதில் நின்று ஒட்டு விடுவித்தெடுக்கும்போது மேருமலையானது வராஹ மூர்த்தியின் குளம்பில் ஒடுங்கிக் கிடக்கும்படி மிகப் பெரிய திருவுருவமெடுத்ததாகப் புராணங்கள் கூறுவதையுட்கொண்டு இப்பாசுரமருளிச் செய்யப்பட்டது. இதில் "சிறு பரல் சிலம்பினிடைப்போல் பெரிய மேரு திருக்குளம்பில் கணகணப்ப" என்று உபமான

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

நிர்தேசமுள்ளது. *க்ஷுரமத்யகதோ யஸ்ய மேரு: கணகணாயதே* என்பது புராண ச்லோகம். ஒரு தண்டைச் சிலம்பிலே மிகச் சிறிய பருக்காங்கல்லை யிட்டுவைத்தால் அது எப்படி கணகணவென்றொலிக்குமோ, அப்படி பெரிய மேருமலையானது வராஹ நாயனாருடைய திருக்குளம்பிலே கணகணத்ததென்கை. இதனால் வராஹப்பெருமானுடைய எல்லையில்லாத பெருமை தெரிவிக்கப்பட்டதாம். ... (35)

36. *கறவாமடநாகுதன் கன்றுள்ளினாற்போல்.*

பெரிய திருமொழி 7-1-1. *கறவாமடநாகென்று தொடங்குமிப்பாட்டில் முதலடியில் உவமை கூறப்பட்டிருப்பது வியக்தம். இரண்டாமடி *மறவாதடியேன் உன்னையே யழைக்கின்றேன்* என்றுள்ளது. கன்றானது தனது தாய்ப்பசு பால் சுரவா விடில் அதனையே நினைத்துக் கதறுமாபோலே பேறுபெறாத அடியேன் ஓயாது உன்னையே சொல்லிக் கதறுகின்றேன்—என்பது இங்குப் பொருள். பிள்ளையமுதனாரென்னுமாசிரியர் இப்பாட்டின் முதலடிக்குப் பொருள் சொல்லப் புகுந்து, **கறவா மடநாகு**—கறவாத பசுவானது, **தன் கன்று உள்ளினாற்போல்**—தன் கன்றை நினைக்குமாபோலே. என்று பொருள் சொல்லி, இப்பொருள் இரண்டாமடியோடு சேராமையாலும் வேறுவகையாகப் பொருள் சொல்ல ஸ்புரியாமையாலும் திகைத்து நின்றார். நாகானது தன் கன்றை நினைக்குமாபோலேயென்றால், நாகின் ஸ்தானத்திலே ஆழ்வாரான தம்மையும், கன்றின் ஸ்தானத்திலே எம்பெருமானையும்கொள்ளவேண்டிவருகையாலே இது அஸங்கதமாகிறதே யென்று மிடிபட்டார். அவ்வளவிலே பட்டர்பாடே பொருள்கேட்ட வொருவர் அந்த கோஷ்டியிலே இருக்கக்கண்டு 'இவ்விடத்திற்கு பட்டர் எங்ஙனே நிர்வஹிக்கும்படி?' என்று கேட்க, 'நாகு என்றது முதல் வேற்றுமையன்று, இரண்டாம் வேற்றுமை; நாகைத் தன்கன்று உள்ளினாற்போல் என்றருளிச் செய்யும்படி' என்றாராம். **நாகுதன்**—நாகினுடைய, **கன்று**—கன்றானது, **உள்ளினால்போல்**—தாயையே நினைத்துக் கத்துமா போலே என்றுமாம். *தாய்நினைந்த கன்றேயொக்க* என்பர் மேலும். ... (36)

37. *வள்ளலே! உன்தமர்க்கு என்றும் நமன்தமர் கள்ளர்போல்.*

பெரிய திருமொழி 8-10-7. *வெள்ளைநீர் வெள்ளத்து* என்று தொடங்கும் பாசுரத்தில் கண்ணபுரத்துறையம்மானை நோக்கி "வள்ளலே! உன்தமர்க்கென்றும் நமன் தமர் கள்ளர்போல்" என்று பாகவதர்கள் விஷயத்தில் யமபடர்களைக் கள்ளர் போன்றவராகக் கூறினர். யமன் தன் தூதுவர்களை யழைத்து "பரிஹர மதுஸூதநப்ரபந்நாந் ப்ரபுரஹம் அந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம்" என்று கட்டளையிட்டிருப்பதனாலும், *சித்திரகுத்தனெழுத்தால் தென்புலக்கோன் பொறியொற்றி, வைத்த விலச்சினை மாற்றித் தூதுவரோடியொளித்தார்* என்று பெரியாழ்வார் அருளிச்செய்திருக்கையாலும் யமகிங்கரர்கட்குக் கள்ளர்களை உவமை கூறினது பொருத்தமாயிற்று. ... (37)

38—46. "பழமொழியால் பணிந்துரைத்த பாட்டிவை".

பெரிய திருமொழி. பத்தாம்பத்தில் *புள்ளுருவாகி நள்ளிருள்வந்த* என்று தொடங்கும் பதிகத்தின் நிகமனப் பாசுரத்தில் "பழமொழியால் பணிந்துரைத்த பாட்டிவைபாடிடப் பத்திமைபெருகிச் சித்தமும் திருவொடுமிகுமே" என்றருளிச்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

செய்யப்பட்டுள்ளது. ஒன்றுமுதலான ஒன்பது பாசுரங்களிலும் ஒவ்வொரு பழமொழியை யெடுத்துக்காட்டியிருப்பது உபமானமாகும். அவ்வொன்பதும் அடைவே விவரிக்கப் படுகின்றன. (38) *பிள்ளை தன்கையில் கிண்ணமேயொக்க* என்பது முதற்பாசுரத்தி லிட்ட உபமானம். "பிள்ளைகையிற்கிண்ணம் மெள்ளவே கொள்ளலாம்." என்ற பழமொழி இப்பாசுரத்தில் அமைக்கப்பட்டது. மிக்க வலிமையுள்ளவர்கள் பொற்கிண்ண மொன்றைக் கவர்ந்தால் அதனை மீட்டுக் கைப்பற்றுவதற்கு ப்ரயாஸங்கொள்ளவேணும். அங்ஙனல்லாமல் சிறுபிள்ளை கவர்ந்த கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொள்ளவேண்டுமானால் அதற்காக ப்ரயாஸப்படவேண்டுவதில்லை. நினைத்தபோது எளிதாக வாங்கிக்கொள்ளு கிறேமென்று ஆறியிருக்கும்படியாக இருக்குமேயன்றிப் பதறவேண்டியிராது. அதுபோல இப்பரகாலநாயகி விஷயத்தில் எம்பெருமான் நினைத்திருப்பதாகச் சொன்னது, இவளை அவ்விதமாக அலக்ஷியம் செய்திருப்பதாகச் சொன்னவாறு. இங்கு வியாக்கியான ஸ்ரீஸூக்தி—"பலவான்கள்கையில் கிண்ணியிறே வாங்க அரிது; பாலராயிருப்பார் கையிலது நினைத்தபோது வாங்குகிறேமென்று ஆறியிருக்கிறப்போல ஆறியிருக்கிறாயோ?" என்பதாம். ... ... (38)

39. *முன்றிலெழுந்த முருங்கையில்தேனா முன்கைவளை கவர்ந்தாயே*

அப்பதிகத்தில் இரண்டாம் பாட்டில் *நின்கோயில் முன்றிலெழுந்த முருங்கையில் தேனா முன்கைவளை கவர்ந்தாயே* என்று மற்றோர் உபமானம் கூறப்பட்டது. நெடுந் தூரத்திலிருப்பதன்றிக்கே ஸமீபத்தில் வாசலிலேயுள்ளதான ஒரு மரத்தில் தேனிருந்தால் அதனை எப்படி எளிதாகக் கவரலாகுமோ, அப்படி இவளது கைவளைகளை எளிதாகக் கவர்ந்துகொண்டாயே! என்றவாறு. கைவளைகளைக் கவர்ந்ததாவது உடலிளைக்கச் செய்கை. ... ... (39)

40. *அங்கையில் வட்டாமிவளெனக் கருதுகின்றாயே.*

அப்பதிகத்தில் மூன்றாம்பாட்டில், கைப்பட்ட கருப்புக்கட்டி உபமானமாகக் கூறப்படுகிறது. வியாக்கியான ஸ்ரீஸூக்தி—"கையிலிருந்த கருப்புக்கட்டி தின்னவுமாய்ப் பொகடவுமாயிருக்குமிறே; அப்படியே நினைத்திருக்கிறாயோ இவளையும்." என்பதாம். உலகத்தில் எல்லார்க்கும் கைப்படாத பொருள்களில் விருப்பம் பெருகிச்செல்லுமேயன்றி அப்பொருள்தானே கைப்பட்டுவிட்டால் பிறகு அதில் உபேக்ஷையேயுண்டாகக் காண்கிறோமன்றோ? அதுபோல இப்பரகால நாயகியும் கைப்பட்ட சரக்காதலால் இவளை அலக்ஷியம் செய்கிறாய்போலுமென்கை. ... ... (40)

41. *உங்கள் தொண்டர்கைத்தண்டென்றவாறே.*

*மல்கிய தோளும் மானுரியதளுமென்கிற நாலாம் பாட்டினீற்றடியில் *இவளை நீ உங்கள் தொண்டர்கைத்தண்டென்றவாறே* என்று தொண்டர்கையிலுள்ள தண்டொன்று உபமானமாகக் கூறப்பட்டது. "*சாபமாநய! ஸௌமித்ரே!* என்று நினைத்தபோது வாங்கிக் காரியங்கொள்ளலாம்படி உரிய அடியார்கையில் ஆயுதத்தோபாதி நினைத்திராநின்றாய்" என்பது வியாக்கியான ஸ்ரீஸூக்தி. அடியவர்களின் கையிலுள்ள

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஆயுதத்தை வாங்குவது எப்படி அலக்ஷியமோ, அப்படி இவளையும் அலக்ஷியம் செய்கிறாயே! என்றவாறு. ... ... (41)

42. *பெருவழி நாவற்கனியினுமெளியளிவளென *

செருவழியாத மன்னர்கள்மாள என்கிற ஐந்தாம் பாட்டினிற்றடியில் *பெருவழி நாவற்கனியினுமெளியளிவளெனப் பேசுகின்றாயே* என்றுள்ளது. பெரிய தொருவழியிலே நாவற்பழம் விழுந்து கிடந்தால் அதைக் குனிந்தெடுத்தாலுமெடுக்கலாம்; தவிரவும் தவிரலாம். அதுவே எட்டாநிலத்திலிருக்குமாகில் அபேக்ஷை விஞ்சியிருக்கும். ஸர்வஸாதாரணமான வழியிலே விழுந்து கிடக்கிறதென்னுங்காரணத்தினாலேயேஉபேக்ஷாஸ்பதமாயிருக்குமாயிற்று. அதுபோலவே இவளையும் உபேக்ஷைக்கு உரியவளாகக் கருதுகின்றாய்போலுமென்றவாறு. ... ... (42)

43. *எருக்கிலைக்காக எறிமழுவோச்ச லென்செய்வது.*

*அரக்கியராகம்புல்லெனவென்னுமாறும்பாட்டினிற்றடி *எருக்கிலைக்காக எறிமழு வோச்ச லென்செய்வ தெந்தை பிரானே* என்றுள்ளது. (பாசுரத்தின் கருத்தைச் சிறிது விவரித்தாக வேண்டும்.) *முருக்கிதழ்வாய்ச்சி முன்கைவெண்சங்கங்கொண்டு முன்னே நின்று போகாய்* என்பது மூன்றாமடி. பிரானே! இவளுடைய அதரத்தின் வைலக்ஷண்யத்தைச் சிறிதும் நினைக்கின்றாயில்லையே. இவளது உடலை ஈர்க்குப்போல இளைக்கச்செய்து கைவளைகளைக் கழலச்செய்தாயே! உன்னை மறந்தாவது இவள் பிழைக்கலாமென்று பார்த்தால் அதுதனக்கும் இடமறும்படி உருவெளிப்பாட்டாலே நலிகின்றாயே! அபலையான இவளை உயிர்வாங்குதற்கு நீ இத்தனை ப்ரயாஸம் கொள்ள வேணுமோ? தன்னடையே பழுத்து நெகிழ்ந்து விழக்கடவதான எருக்கிலையை உதிர்ப்பதற்கு மழுப்படை கொண்டு வியாபரிப்பாருண்டோ? என்கிறான் திருத்தாய். (மழுப்படை—கோடாலி.) ... ... (43)

44. *கோழிவெண்முட்டைக்கென் செய்வதெந்தாய் குறுந்தடி.*

*ஆழியந்திண்டேரரசரென்னும் ஏழாம்பாட்டினிற்றடி *கோழிவெண்முட்டைக்கென்செய்வதெந்தாய்! குறுந்தடி நெடுங்கடல் வண்ணா!* என்றுள்ளது. பூர்த்தியான பாசுரத்தின் கருத்தென்னவென்றால்; கடல் வண்ணனே! கண்ணழகியான இப்பரகால நாயகியின் மேனி நிறத்தைக் கவர்ந்து கொண்டாய்; இது செய்த நீ இவளை அடியோடு முடித்துவிடலாமே; இவளைச் சித்திரவதம் பண்ணவேணுமென்று கருதியோ உருவெளிப் பாட்டாலே நலிகின்றாய்? (பரசுராமாவதாரத்தில்) கார்த்த வீர்யார்ஜுனனுடைய ஆயிரந்தோள்களையும் கோடாலிப்படையினால் அறுத்துத் தள்ளின வீரத்தை நீ இவள் திறத்திலே காட்டுகின்றாய்போலும்; இவளை மாய்ப்பதற்கு இத்தனை ப்ரயாஸங் கொள்ள வேணுமோ? தன்னடையே உடைந்துபோகக்கூடியதான கோழி முட்டையைத் தகர்ப்பதற்குச் சிறிய தடிதானும் வேணுமோ? ஏதுக்கு இத்தனை வீண்பிரயாஸம் கொள்ளுகிறாய்? என்கை. ... ... (44)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

45. *கவுட்கொண்ட நீராமிவளெனக் கருதுகின்றாயே.*

*பொருந்தலனுகம் புள்ளுவந்தேறவென்னு மெட்டாம் பாட்டினீற்றடி *கருங் கடல் வண்ணா! கவுட்கொண்ட நீராமிவளெனக் கருதுகின்றாயேயென்றுள்ளது. கபோல மென்னும் வடசொல் கவுள் எனச் சிதைந்தது. வாய்க்குள் கொள்ளப்பட்ட நீர் உள்ளேயிழிச்சுகைக்கும் வெளியில் கொப்பளிக்கைக்கும் உரியதாயிருக்குமாபோலே 'இவளைக் கைப்பற்றினாலும் பற்றுவோம், விட்டாலும் விட்டிடுவோம்' என்று நினைத் திருக்கிறாயேயன்றி *பெருந்தடங்கண்ணியாகிய இவளையோ நாம் உபேக்ஷிப்பதென்று திருவுள்ளம்பற்றுகிறாயில்லையேயென்றவாறு. ... ... (45)

46. *ஆரழலோம்பு மந்தணன் தோட்டமாக.*

*நீரழல்வானாய் நெடுநிலங்காலாயென்னுமொன்பதாம் பாட்டினீற்றடி *ஆரழ லோம்புமந்தணன் தோட்டமாக நின்மனத்துவைத்தாயே யென்றுள்ளது. இதற்குச் சிலர் கருத்துக் கூறுவதாவது—நித்தியம் தீ வளர்த்து ஹோமம் செய்கிற அந்தணனவன் தன்னுடைய தோட்டத்திலுள்ள மரங்களையெல்லாம் கொஞ்சங்கொஞ்சமாக வெட்டி வெட்டி நெருப்புக்கு இரையாக்கி அழித்துவிடுவதுபோல இவளை நீ சிறிது சிறிதாக அழித்துவிடப் பார்க்கிறாயே! என்றும்; இது சுவையற்ற கருத்து; "அக்நி பரிசர்யை பண்ணவே காலம் போந்திருக்கிற ப்ராஹ்மணன்தோட்டமாக நினைத்தாயே" என்ற பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில் காட்டப்பட்ட கருத்தே சுவையுடையதாம். அல்லும் பகலும் அதற்கென்றே உழைக்கக்கூடியவனுடைய தோட்டம் செழிப் புற்றோங்கிவளருமேயல்லது அக்நிஹோத்ரம் பண்ணிப் போதுபோக்குமவனுடைய தோட்டம் செழித்து வளரமாட்டாது; கவனிப்புக்குறைவினால் பாழாய்ப்போய்விடும். ஆகவே, அக்நிஹோத்ரியானவனுக்குத் தோட்டத்திலே எப்படி அலக்ஷ்யதாபுத்தி இருக்குமோ அப்படி உனக்கும் இவளிடத்திலே அலக்ஷியம் உண்டாய்விட்டதே! என்பதாகவே கருத்தாகும். ... ... (46)

47. *மையார் கடலும் மணிவரையும் மாமுகிலும் கொய்யார் குவளையுங் காயாவும் போன்றிருண்டமெய்யான்.*

பதினோராம்பத்து ஏழாம்பதிகத்தின் ஐந்தாம்பாட்டானவிதில் எம்பெருமானுடைய திருமேனிக்கு ஐந்து பொருள்கள் உபமானமாகக் கூறப்பட்டன. கடல்போலே எல்லை காணவொண்ணாததாய், மணிமலைபோலே நெஞ்சுக்கு ஆகர்ஷகமாய், காளமேகம்போலே குளிர்ந்து விடாயைத் தீர்ப்பதாய், குவளைப்பூவும் காயாமலரும்போலே வைத்த கண் வாங்காதே பார்த்துக்கொண்டேயிருக்க வேண்டும்படியான திருமேனியையுடையவன் எம்பெருமான். ... ... (47)

48—54. *மாற்றமுளவாகிலும் பதிகத்தில் ஏழுபாசுரங்கள்.*

பதினோராம்பத்தின் இறுதிப்பதிகமான *மாற்றமுளவில்—பிறவித்துன்பம் மிகக் கொடிது என்பதையும், அஃது அவசியம் போக்கிக்கொள்ள வேண்டியதொன்று என்பதையும், அது தம்மால் ஒழிக்கவொண்ணாதபடியுள்ளதனால் அதற்குத் தாம் மிக

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அஞ்சுகிறபடியையும் கூறுகையில் அவ்வச்சத்திற்கு ஒவ்வொரு பாட்டில் ஒவ்வொரு விதமான உபமானங்கூறுகின்றார். *மாற்றமுளவென்கிற முதற்பாட்டில்* ஆற்றங்கரை வாழ்மரம்போலஞ்சுகின்றேன்* என்கிறார். ஆற்றங்கரையிலுள்ள மரம் அந்த ஆற்றின் வெள்ளம் பெருகித் தன் வேரை அறுத்திடத் தொடங்கினால் அவ்வபாயத்தைப் பரிஹரித்துக் கொள்ளவாவது அத்தீங்குக்கு இடமின்றி விலகிநிற்கவாவது அத்துயரைத் தீர்ப்பதற்குப் பிறரைத் துணையாகக் கூப்பிடவாவது மாட்டாமல் முறிந்துவிழுந்து அழிவுக்குள்ளாகும். தமது நிலைமை எப்பொழுதும் அபாயத்துக்கு இடமாதல் பற்றியும் தமக்கு வரும் துன்பத்தைத் தாமே போக்கிக்கொள்ள மாட்டாமைபற்றியும் தமக்கு அந்த மரத்தை உவமை கூறினார். ... ... (48)

49. *சீற்றமுளவென்கிற இரண்டாம்பாட்டிலே *காற்றத்திடைப்பட்ட கலவர் மனத்தை உவமை கூறுகின்றார். பெருங்காற்றிலே அகப்பட்ட மரக்கலத்தினுள்ளே கிடப்பவர்களின் நெஞ்சுபோலே என்னெஞ்சம் துளங்குகின்றதென்கிறார். அவர்கட்கு அச்சம் மேலிடுமேயன்றி அவ்வச்சத்தின் காரணத்தைத் தவிர்க்கும் சக்தியில்லையென்பார் அவர்கள் மனத்தைத் தமக்கு உவமைகூறி 'அஞ்சித் துளங்காநிற்பன்' என்றார். அம்மரக் கலத்திலுள்ளார் பலர்க்கும் உண்டாகிற அச்சத்தினளவு அச்சம் இவரொருவர்க்குமே உண்டாயிற்றென்பது தோன்ற 'கலவர்' எனப் பன்மையாற் கூறினார். அவர்களுக்குக் கவலை உடம்பு அழிதலில் மாத்திரம்; இவர்க்குக் கவலை—உயிர் பேறுபெறுது அழிதலில், என நுண்ணிய வேறுபாடு தோன்றுமாறு 'ஆற்றத் துளங்காநிற்பன்' என்றார். அம்மரக்கலத் தாரது கலக்கத்தினும் தமது கலக்கம் மிக்கதென வெளியிட்டவாறு; ஆதலால், கலவர் மனம் இவர்க்கு ஒருபுடை யுவமையேயன்றி முற்றுவமையன்றென்க. ... (49)

50. *தூங்கார் பிறவிக்கஎன்கிற மூன்றும் பாட்டில் *பாம்போடொரு கூரையிலே பயின்றாற்போலென்கிறார். இன்னமும் பலபல யோனிகளிலே என்னைப் புகும்படி செய்து மீட்காதிருந்திடுவையோவென்று கவலைகொண்டு அப்பிறவித் துன்பங்களை நினைத்து அஞ்சுகின்றேனுதலால், பொல்லாத பாம்புடனே ஒரு வீட்டில் பழகி வசிப்பது போலப் பல பொல்லாங்குகட்கு இடமான உடலோடு கூடி வாழ்வதைப் பொறுமல் என்மனம் தடுமாறுகின்றதென்கிறார். ... ... (50)

51. *உருவார் பிறவிக்கஎன்கிற நான்காம் பாட்டில், இருபாடெரி கொள்ளியினுள் எறும்பேபோல்= எந்தப்பக்கம் போனாலும் தீமையையே அடையும்படி ஜநந மரணங்களிரண்டுக்கும் நடுவே அகப்பட்டு நோவுபடுகிற தன்மைக்கும் எங்கும் புகலிடமு மின்றிப் பொறுக்கவும் மாட்டாது படுகிறபாட்டுக்கும் ஏற்ற உவமை. தமது எளிமை தோன்ற எறும்பை உவமை கூறினார். ... ... (51)

52. *கொள்ளக்குறையாதவென்னும் ஐந்தாம்பாட்டில் *வெள்ளத்திடைப் பட்ட நரியினத்தை உவமை கூறுகின்றார். நரியினம்போலே=வெள்ளத்திலகப்பட்ட ஒரு நரியின் வருத்தம் தமது கிலேசத்திற்கு ஒப்பாதற்குப் போதாதென்னுங்கருத்தால் 'நரி யினம் போலே உள்ளந்துளங்கா நிற்பன்' என்கிறார். நரிகள் பலவற்றுக்குமுண்டான பயம் இவரொருவர்க்குமே உண்டாயிற்றென்க. ... ... (52)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

53. *படை நின்ற வென்கிற ஆறாம்பாட்டிலே "இடையனெறிந்த மரமேயொத் திராமே" என்று அருளிச்செய்ததன் கருத்தாவது, ஆடுமாடுகள் எட்டித் தழை மேயலாம்படி இடையர்கள் சிலமரங்களின் கிளைகளைக் கைக்கத்திகொண்டு பாதியளவு வெட்டிச் சாயவிட்டிருத்தல் இயல்பு; அம்மரம் ஒருசார் பசுமையாய் ஒருசார் உலர்ந்து கிடக்கும்; அதுபோல நான் ஞானலாபத்தாலுண்டான மகிழ்ச்சியைப் பெற்றதனோடு பேறுகிடைக்கப் பெறுமையாலுண்டான வாட்டத்தையும் அடைந்திராதபடி எனக்கு அருள்செய்யவேண்டுமென்கிறார். "நீடுபன் மலர்மாலையிட்டு நின்னிணையடி தொழுதேத்து மென் மனம்வாட நீ நினையேல்...........அணியாலியம்மானே!" என்றார் முன்னும். முழுவதும் ஆநந்தமே பெறும்படி அருளவேண்டுமென்றவாறு. வேர்பறிந்த கொடியின் மலர்களும் போட்டவிடத்திலே செவ்வி பெறும்படி செய்யுந் தேசத்திலே வாழ்பவனுய் முதல் பறிந்ததற்குஞ் செவ்வி பெறுத்தவல்ல பரமசக்தியுக்தனை உனக்கு வேர்பறியாது ஒருசாருலர்ந்தது மாத்திரமாயுள்ள மரத்துக்கு முழுவதும் பசுமையுண்டாம்படி செய்தல் எளிதே; ஆகவே, அம்மரம்போல ஒருபுறம் தளிர்த்து ஒருபுறம்வாடும் எனக்கு நீ பூர்ணு நந்தத்தை விளைக்கத் தட்டில்லையென இப்பாசுரத்தின் நயமுணர்க. பல பொல்லாங்கு கட்கு இடமான உடம்புடனே இவ்வுலகத்திலேயிருந்து தொண்டுசெய்தலினுல் பூர்ணத்ருப்தியுண்டாகாமைபற்றி நான் பரமபதத்தில் உன்னையடையும்படி அருள்புரிய வேணுமென்று வேண்டினுராயிற்று. ... ... (53)

54. *வேம்பின்புழு வென்கிற ஏழாம் பாட்டிலே உபமானவாக்கியமான முதலடியும் உபமேயவாக்கியமான இரண்டாமடியும் தனித்தனி நின்று இடையில் உவமவுருபுபெருமல் பிம்பப்ரதிபிம்பபாவந் தோற்ற நிற்கின்றது. கீழ் "தொண்டர் தங்கள் சிந்தையுள்ளே முளைத்தெழுந்த தீங்கரும்பு" என்றும் "அமுதம் பொதியின்சுவைக் கரும்பு" என்றும் "கன்னலைக் கரும்பினிடைத்தேறலை" என்றும் ஸர்வரஸனை எம்பெருமானது மிக்க இனிமைக்கும் அவ்வினிமையில் தாம் கொண்டுள்ள ஈடுபாட்டுக்கும் ஏற்பக் கரும்பை உவமைகூறிப் போந்தவர் அதற்கு மாருகவும், "இன்சுவைக் கட்டி" எனப்படுகிற அப்பரம்பொருளின் தகுதிக்குப் பொருந்தாதபடியும் வேம்பை உவமை கூறியது என்னென்னில்;— யான் உன்னையே விரும்பியிருப்பது நீ மிக இனியனுயிருத்தல் பற்றியே யன்று; நீ மிக இன்னுதவனு யிருப்பினும் உன்னையே விரும்பியிருக்குந் கடப்பாடுடையேன் யான் என்னுங்கருத்து அமைய இங்ஙனங் கூறினரென்க எம்பெருமா னிடத்தில் நமக்குள்ள அடிமை, குணங்காரணமாகவன்று; ஸ்வரூபப்ரயுக்தமென்கை. (54)

இனி இயற்பாவிலிருந்து உவமைகள் காட்டப்படும்.

55. *வரைமேல் மரகதமேபோலத் திரைமேல் கிடந்தான்.*

பொய்கையாழ்வாருடைய முதல் திருவந்தாதியில் *உரை மேற்கொண்டு என்னுள்ள மோவாதென்கிற இருபத்தைந்தாம் பாட்டில் *வரைமேல் மரகதமே போலத் திரைமேல் கிடந்தானை* என்றவிது அபூதோபமை. திருப்பாற்கடலிலே எம்பெருமான் பள்ளி கொண்டிருப்பது—வெண்ணிறமான தொரு மலையில் மரகதக் கல்லைப் பதித்தாற்போன்றிருப்பதாகக் கூறினவிது இல்பொருளுவமை. ... (55)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

56. *தாய்நாடு கன்றேபோல் தண்டுழாயானடிக்கே போய் நாடிக்கொள்ளும் *

முதல் திருவந்தாதியில் *தெளிதாகவுள்ளத்தையென்று தொடங்கும் முப்பதாவது பாட்டில், நன்குணர்வார் சிந்தையானது தண்டுழாயானடியை நாடிக்கொள்ளுந் தன்மைக்கு "தாய்நாடுகன்றேபோல்" என்கிறவுவமை கொடுக்கப்பட்டது. மனத்தைப் பட்டிமேய வொண்ணுதபடியடக்கி எம்பெருமானேடு தமக்குள்ள உறவையறிந் திருப்பவர்களின் மனமானது மற்றெவரையும் பற்ருமலும் ஐம்புலன்களிற் செல்லாமலும் அப்பெருமானையே பற்றிக்கொண்டு மிக்க ஆவலுடன் சென்றுகிட்டும். (இஃது எப்படி போலவென்னில்;) ஒரு கன்ருனது பல்லாயிரம் பசுக்களின் திரளினுள்ளே தனது தாயைக் கண்டுபிடித்துக் கொள்வதுபோல. இதற்கு ஸம்பந்தவுணர்ச்சியே காரணம்; ஸம்பந்த ஜ்ஞானமில்லாதவர்களுக்கு ஒரு நாளும் எம்பெருமானைக் கிட்டுதல் இயலாது. அஃது உள்ளவர்களுக்கு அது மிகவும் எளிது—என்றதாயிற்று. ... (56)

57. *மகிழலகொன்றேபோல் மாறும் பல்யாக்கை.*

முதல் திருவந்தாதியில் நாற்பத்தொன்பதாம் பாட்டில் "மகிழலகொன்றே போலென்கிற உவமை கூறப்பட்டுள்ளது. தேவயோனிகளென்றும் மனுஷ்ய யோனிகளென்றும் திர்யக் யோனிகளென்றும் பலவகைப்பட்ட யோனிகளில் பிறப்பதும் இறப்பதுமாகி ஸம்ஸாரத்தைத் தொலைத்துக்கொள்ள விருப்பமுடையவர்களுக்கே எம்பெருமானைக் காணுதல் கைகூடுமென்கிறவிது இப்பாட்டுக்கு விவக்ஷிதம். பகவத் ஸங்கல்பத்தாலே கர்மானு குணமாக உத்க்ருஷ்டமாகவும் அபக்ருஷ்டமாகவும் பல வகைப்பட்ட ப்ரஹ்மாதிபிபீலிகாந்தமான சரீரங்கள் மாறிமாறி வருவதற்கு ஏற்ற உவமை "மகிழலகொன்றேபோல்" என்பது. பலகறை, மகிழம்விதை முதலியவற்றைவைத்துக் கொண்டு ஆடுகிற முறையுண்டே. அதில் ஒரு மகிழம்விதையே சற்றுப்போது காணிஸ் தானத்திலும், சற்றுப்போது கோடிஸ்தானத்திலும் மாறிமாறி வந்துகொண்டிருக்கும். இதனை பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர சதகத்தில் "படுநைகவராடிகேவ" என்றருச் செய்தார். ... ... (57)

58. *வனத்திடரை யேரியாம் வண்ணமியற்று மிதுவல்லால் மாரி யார் பெய்கிற்பார்? *

பூதத்தாழ்வாருடைய இரண்டாந்திருவந்தாதியில் *தனக்கடிமைபட்டதென்று தொடங்கும் பதினும் பாட்டின் பின்னடியானவிதில் உவமைக்குறி இல்லையாயினும் உபமான கர்ப்பமாகவே இது கூறப்படுவதாம். மேகம்பெய்யும் தண்ணீர் மேடான நிலத்தில் தங்காது; அது தங்குவதற்காக மேட்டையிடித்துப் பள்ளம் செய்யப் படுவதுண்டு. பள்ள நிலத்தில் தண்ணீர் தேங்குமாறுலும் தண்ணீரை நம்மால் வருவிக்க முடியாதன்றே. அது தானகப் பெய்தாலுண்டு. மேட்டைச் சரித்துப் பள்ளமாக்கினதற்குப் பயன் என்னவென்றல், பெய்கிற மழையைத் தங்கச்செய்வதேயாம். இதுபோல, நாம் சில காரியங்கள் செய்வது எம்பெருமானருளுக்கு ஸாதனமாகாது; அவ்வருள்வெள்ளம் தன்னடையே பெருகும்போது அதற்கு நாம் இலக்காகப் பெறுவோமத்தனை—என்றவாறு. அடியேனுடைய திவ்யார்த்ததீபிகையில் விரிவு காண்க.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

59. *திகிரி சுடரென்றும் வெண்சங்கம் மதியென்றும் பார்த்து.*

பேயாழ்வாருடைய மூன்றுந் திருவந்தாதியில் *ஆங்கு மலரும் குவியும் மாலுந்திவாய்* என்னும் அறுபத்தேழாம் பாசுரத்தில் திருவாழியாழ்வானுக்கு ஸூர்யனை உபமானமாகவும், திருச்சங்காழ்வானுக்குச் சந்திரனை உபமானமாகவும் திருவுள்ளம் பற்றி ஒரு உல்லேகம் செய்தருளுகிறார். சேஷசாயியான எம்பெருமானுடைய திருநாபிக்கமலம் நன்றாக விகஸித்ததாகவுமிராதே நன்றாக மூடிக்கொண்டதாகவுமிராதே மலர்வதும் மொட்டிப்பதுமாயிருப்பதாக முன்னடிகளிற்கூறிப் பின்னடிகளில் அதற்கு ஹேதுவையருளிச்செய்கிறார். எம்பெருமானுடைய வலத்திருக்கையிலுள்ள திருவாழியாழ்வான் *பாஸ்கரகோடி துல்யனுகையாலே ஸூர்யனைப் பார்த்துத் தாமரை விகஸிக்குமே: இடத்திருக்கையில் திகழும் சங்காழ்வான் *சந்திரமண்டலம்போல்* என்ற நாச்சியார் திருமொழியின்படி சந்திரனேடொத்திருக்கையாலே சந்திரனைப் பார்த்துத் தாமரை மூடிக்கொள்ளுமே. இவ்விரு நிலைமையும் மாறிமாறி நிகழ்வதாகச் சொல்லிற்று. ... ... (59)

60. *வேம்புங் கறியாகுமேன்று.*

நான்முகன் திருவந்தாதியில் (94) *மெய்தெளிந்தாரென்செய்யார்* என்னும் பாட்டின் ஈற்றடி "வேம்பும் கறியாகுமேன்று" என்பதில் உவமவுருபு இல்லையாயினும் இஃது உவமையாகவே வைத்துக் கூறப்பட்டது. இப்பாட்டின் கருத்தை நன்குணர்ந்தால் இது உவமையேயென்பது தெளிவாகும். கருத்தாவது, அடியேன் சீலமில்லாச் சிறியேனுயினும் அடியேன் பக்கல் அருள்செய்ய வேணும். குற்றமே வடிவாகவுள்ளவர்களை இகழ்ந்தொழிய வேண்டுமேயன்றிக் கைக்கொள்வது தகாது என்று திருவுள்ளம் பற்றலாகாது. வேப்பிலை கைக்குமென்றாலும் இதைக் கறியாகச் சமைத்து உட்கொள்ள வேணுமென்னும் விருப்புடையார்க்கு அது கறியாகின்றதன்றோ? அப்படியே குற்றவாளரைக் கைக்கொள்வதே சீரியது என்று தெளிந்தவர்கள் என்போல்வாரை ஏன் அங்கீகரிக்கமாட்டார்கள்? அங்கீகரித்தே தீருவர்கள். ஸ்வாமிந்! அடியேனுடைய குற்றங்களை நற்றமாகவே கொண்டோ அல்லது அவற்றில் திருக்கண் செலுத்தாமலோ அடியேனை விஷயீகரித்தருள வேணுமென்பதாம். இதற்குச்சேர—ஈற்றடிக்கு, வேம்பும் கறியாவதுபோல என்று பொருள் தேறும். ஏன்று என்பதற்கு வேணுமென்று விரும்பு மளவில் என்று பொருள். ... ... (60)

61. *ஒண்முத்தும் பைம்பொன்னுமேந்தி ஓரோ குடங்கைப்பெரியன கெண்டைக்குலம்.*

திருவிருத்தத்தில் (11.) *அரியன யாமின்று காண்கின்றன* என்னும் பாசுரத்தில் *ஒண்முத்தும் பைம்பொன்னும்—கெண்டைக்குலம்* என்கிற இம்மூன்று சொற்களும் உபமேயத்தை மறைத்து உபமானத்தை மட்டுமே சொன்னவை. முத்து என்றது முத்துப்போன்ற கண்ணீரரும்பைச் சொல்லும். பைம் பொன் என்றது 'பொன் குலாம் பயலை' எனப்படும் பசலை நிறத்தைச் சொல்லும். கெண்டை யென்றது கயல்போன்ற கண்ணைச்சொல்லும். இங்கு இப்பாசுரத்தின் சுவைப்பொருளையறிவது நன்று. பொருள்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

படைப்பதற்காக நாயகியைப் பிரிந்துபோகவேணுமென்றெண்ணிய நாயகன் அவளோடு சொல்லாமல் சடக்கெனப் பிரிந்தாலும், அல்லது தேசாந்தரம் போய்வருவதாயிருக்கிறே னென்று பிரிவை ப்ரஸங்கித்தாலும் அவள் மரணபர்யந்தமான கஷ்டத்தை யடைந்திடு வளென்று கருதி அவள் ஆற்றுமாறு மெதுவாகப் பிரிவைத் தெரிவிக்கத் தொடங்கி லோகாபிராமமாகப் பலப்ரஸ்தாவங்கள் பண்ணுமடைவிலே 'உலகத்திலே பொருளீட்டு வதற்காகப் பிரிந்து தேசாந்தரம் போவதென்கிறவொரு விஷயமுண்டு' எனப் பொதுப் படையானவொரு ப்ரஸ்தாவமெடுத்துக்கூற, அவள் அது கேட்டவுடன் 'இப்போது இவர் இவ்விஷயம் ப்ரஸ்தாவித்தது வெறுமனல்ல, இது லோகாபிராமவார்த்தைகளிற் சேர்ந்ததல்ல, நம்மைப் பிரிந்து போவதற்காகவே இது அவதாரிகையாகக் கூறின கூற்றுயிருக்கவேண்டும். என நினைத்து, பிரிவு உண்டாய்விட்டதாகவே நினைத்து வருந்திப் பிரிவாற்றுமையாலுண்டாகும் பசப்பென்கிற நிறவேறுபாட்டையடைந்து கண்ணுங் கண்ணீருமாயிருக்க, அதைக்கண்ட காதலன் 'நாம் பிரிந்து போவதாகச் சொல்லாதிருக்கவும் வெறும் வார்த்தையிலே நமது உட்கருத்தைத் தெரிந்துகொண்ட இவளது நிலைமை இப்படியாயிற்றே' யென்று வியந்து தோழியை நோக்கிக் கூறிய பாசுரமாக அமைந்த திப்பாட்டு. ஆழ்வார்க்கு எம்பெருமானுடைய பிரிவின் ப்ரஸ்தா வமும் அஸஹ்யமாகித் திருமேனி நிறவேறுபாடுற்றுக் கண்ணீர் பெருக நிற்குந் தன்மை இதனுல் தெரிவிக்கப்பட்டதாயிற்று. ... ... (61)

62. *வன்காற்றறைய வொருங்கேமறிந்துகிடந்தலர்ந்த கமலத்தடம்போல் பொலிந்தன எம்பிரான தடங்கண்கள்.*

திருவிருத்தத்தில் (42) *வன்காற்றறையவென்னும் பாசுரத்தில்—ஆழ்வார் தம்மீது எம்பெருமானுடைய திருக்கண்கள் ப்ரஸரித்தமைக்குக் கூறும் உபமானம் *வன் காற்றறைய வொருங்கே மறிந்து கிடந்தலர்ந்த மென்காற் கமலத்தடம்போல் பொலிந்தன வென்பது. ஒரு தாமரைத்தடாகம் வலியகாற்று வீசுதலால் ஒரு பக்கமாகச் சாய்ந்து கிடந்து மலர்ந்தாற்போலுள்ளன எம்பிரானுடைய தடங்கண்கள் என்றபடி. தடையில்லாத கருணையால் தூண்டப்பட்டது எம்பெருமானுடைய கடாக்ஷவீக்ஷணம்— என்று காட்ட *வன்காற்றறைய* எனப்பட்டது. *காருண்யமாருதாநீதை:* என்றுரே திருக்கச்சிநம்பிகள். பட்டர் இந்தப் பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றியே ஸ்ரீரங்கராஜஸ்தவ—உத்தரசதகத்தில் "வாத்யாவ்யாலோலத் கமலதடாக தாண்டவே" என்றருளிச் செய்தார். ... ... (62)

63. *எப்படி ஊராமிலைக்கக் குருட்டாமிலைக்குமென்னும்.*

திருவிருத்தத்தில் (94.) *மைப்படி மேனியும் செந்தாமரைக் கண்ணும் வைதிகரே* என்கிற பாசுரம் ஆழ்வாருடைய நைச்சியாநுஸந்தானத்தில் தலைநின்ற பாசுரம். எம்பெருமானே! வேதவேதாந்த ஞானத்திற் சிறந்த மஹான்களே உன்னைப் பரிபூர்ண நுபவம் பண்ணுதற்கு உரியராவர்; அறிவிலியான நான் அநுபவித்தவன்போலப் பேசுவது எங்ஙனேயிராநின்றதென்னில் "எப்படி ஊராமிலைக்கக் குருட்டாமிலைக்குமென்னும் அப்படியானுஞ் சொன்னேன்" என்று இது உவமையாகக் கூறப்பட்டது. காட்டிலே மேயச் சென்ற பசுக்கள் மாலைப் பொழுதில் ஊர்க்குத் திரும்பி வருகையில், நன்ருகக்

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கண்தெரிந்த பசுக்கள் நம்மிடத்திற்கு வந்து விட்டோமென்று மகிழ்ந்து அம்மகிழ்ச்சிக்குப் போக்கு வீடாகக் கனைத்தல் செய்ய, கண்ணில்லாத குருட்டுப் பசுவும் அது கேட்டுத் தான் இன்னதென்றறியாமலே ஒக்கக் கனைக்குமென்று உலகம் சொல்லுகிற விதமாகவே, வேதவைதிக மஹா புருஷர்கள் சொன்ன பாசுரத்தைக் கேட்டுவைத்து நானுஞ் சொன்னேனத்தனை. என் ஞானத்தாலே கண்டு என் சக்தியாலே சொல்ல வல்லேனல்லேன் என்றாராயிற்று. இப்பாசுரத்தை அடியொற்றியே பட்டர் ஸ்ரீ குணரத்ந கோசத்தில் *இத்யுக்தி கைதவசதேந விடம்பயாமி தாந் அம்ப! ஸத்யவசஸ: புருஷாந் புராணாந்* என்கிற சுலோக மருளிச்செய்தார். ... ... (63)

64. *ஈன்றோளிருக்க மணைநீராட்டி*

திருவாசிரியத்தில் *ஒழிவுலகினதியல்வே* என்கிற ஆறும் பாட்டில், ப்ராப்த சேஷியான எம்பெருமானுக்கு வழிபாடு ஒன்றும் செய்யாதே தேவதாந்தர பஜனம் பண்ணி அனர்த்தப்பட்டுத் தொலையுமவர்களைப்பற்றி ஆழ்வார் நிர்வேதங்கொண்டருளிச் செய்கையில் "ஈன்றோளிருக்க மணைநீராட்டி" என்றவிது உபமானகர்ப்பமான வார்த்தை. பெற்றதாயிருக்க, அவளுக்கு உபசாரம் செய்வதைவிட்டு மணைக்கட்டைக்கு உபசாரம் செய்யுமாபோலே—என்றபடி. திருமங்கையாழ்வாரும் பெரிய திருமொழியில் தேவதாந்தர பஜனம் பண்ணுமவர்களை நிந்திக்கும் பதிகத்தில் (11-6. *மைந்நின்ற கருங்கடல் வாயென் பதில்) (6.) *போயிருக்க மற்றிங்கோர் புதுத்தெய்வங் கொண்டாடுந் தொண்டீர்! பெற்றதாயிருக்க மணைவெந்நீராட்டுதிரோ?"* என்றருளிச் செய்தது இப்பாசுரத்தை யடியொற்றியே. மணையென்றது அசேதந வஸ்துக்களையெல்லாம் சொன்னபடி. நீராட்டி யென்றது உபசாரங்கள் பலவற்றையும் சொன்னபடி. இவ்விடத்து அறியவேண்டிய விரிவுகள் அடியேனுடைய திவ்யார்த்த தீபிகையுரையில் காணத்தக்கன. ... (64)

65. *முறைமுறையின் தாதிலகுபூத்தெளித்தா லொவ்வாதே.*

பெரிய திருவந்தாதியில் (61) *இறைமுறையான் சேவடிமேல்* என்னும் பாசுரத்தில் *தாழ்விசும்பின் மீதிலகித் தான்கிடக்கும்மீன்—மண்ணளந்தவந்நாள் வானுடர்கூடி—பூத்தெளித்தா லொவ்வாதே* என்றருளிச் செய்தவிது பரமவிலக்ஷண மான உல்லேகம். எம்பெருமான் முன்பு உலகளந்தருளினகாலத்திலே மேலுலகத்தி லுள்ளாரெல்லாரும் அப்பெருமானது திருவடியின்மேல் புஷ்பங்களைத் தூவினார்களன்றோ; அவையே இப்போதும் நக்ஷத்திரங்களாகக் காணப்படுகின்றனவென்று உத்ப்ரேக்ஷை. நக்ஷத்திரங்கள் முல்லைப்பூப்போலேயிருத்தலாலும், அவை விஷ்ணுபதமென்கிற ஆகாசத் திலே நிரம்பியிருக்கையாலும், ஆழ்வாருடைய திருவுள்ளத்திலே எப்போதும் உலகளந்த வரலாறு ஊறிக்கிடக்கையாலும் இங்ஙனே உத்ப்ரேக்ஷித்தபடி. (மீன்—நக்ஷத்திரம்.) (65)

66. *ஏரார்முயல்விட்டுக் காக்கைப் பின்போவதே.*

சிறிய திருமடலில் திருமங்கையாழ்வார் அர்ச்சாவதார ப்ராவண்யாதிசயத்தாலே மோக்ஷ புருஷார்த்தத்தை இல்லை செய்தார். உடனே 'அப்படியொரு புருஷார்த்த முண்டாகிலும் அது இவ்விடத்து அநுபவத்திற் காட்டிலும் சீரியதன்று, சிறியதேயென்று கூறத் திருவுள்ளம்பற்றி *ஏரார்முயல்விட்டுக் காக்கைப்பின் போவதே* என்றருளிச் செய்கிறார். இதில் உவமவுருபு இல்லையாயினும் உபமான கர்ப்பமேயாகுமிது. நிலத்திலே

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஓடுவது முயல்; மரங்களின் மேலே பறந்து திரிவது காக்கை. மாம்ஸம்வேண்டியவன் கைப்படக்கூடிய முயலைவிட்டு, கைப்பட அரியதும் கைப்பட்டாலும் ஆசை தீர்க்கவல்ல தல்லாததுமான காக்கையைத் தேடித் திரிதல் எப்படி அவிவேகிக்ருத்யமோ, அப்படியே எளிதாயும் ரஸவத்தரமாயுமுள்ள அர்ச்சாவதாரபோகத்தைவிட்டு அரிதாயும் அஸாரமாயுமுள்ள மோக்ஷ போகத்தைப்பெற விரும்புகை—என்றுராயிற்று. ... (66)

67. *காட்டகத்தோர் வல்லிக்கடிமலரின் நன்னறுவாசம் மன்னும் வறுநிலத்து வாளாங்கு உகுத்ததுபோல்.*

பெரிய திருமடலில்—எம்பெருமானுடைய அநுபவத்திற்கு உதவாத அவயவம் வியர்த்தம் என்று மனங்கொதித்து அருளிச் செய்கிறவிடத்தில் "கன்னவிலுங் காட்டகத்தோர் வல்லிக்கடிமலரின், நன்னறுவாசம் மற்றுராானுமெய்தாமே, மன்னும் வறுநிலத்து வாளாங்கு உகுத்ததுபோல், என்னுடைய பெண்மையும் என்னலனுமென் முலையும், மன்னுமலர்மங்கைமைந்தன், கணபுரத்துப் பொன்மலைபோல் நின்றவன்தன் பொன்னகலம் தோயாவேல், என்னிவைதான் வாளாவெனக்கே பொறையாகி, முன்னிருந்து மூக்கின்று மூவாமைக் காப்பதோர், மன்னுமருந்தறிவீரில்லையே" என்றுள்ளது. ஒருவரும் புகக்கூடாத காட்டிலே சிறந்ததொரு கொடிதன்னிலே பரிமளோத்தரமான புஷ்பம் புஷ்பித்துக் கமழநின்றுல் யாருக்கு என்னபயன். அது எப்படி வீணனதோ, அப்படியே பகவத் போகத்திற்கு உரித்தாகாத என்னவயவமும் என்கை. (67)

இயற்பாவுபமானங்கள் முற்றுப்பெற்றன.

<u>இனித் திருவாய்மொழியுபமானங்கள்.</u>

68. *என்பிழை கோப்பதுபோலப் பனிவாடையீர்கின்ற.*

திருவாய்மொழி முதற்பத்தில் [4] *அஞ்சிறையமட நாராய் பதிகத்தில் (7) *என்பிழை கோப்பதுபோலப் பனிவாடையீர்கின்ற* என்று, பனிவாடை நலிவதற்கு ஓர் உபமானம் காட்டப்பட்டது. என்பு இழை கோப்பதுபோல—எலும்பிலே துளைத்து நூலிழையை நுழைத்தாற்போல என்றபடி. அதனுல் எவ்வளவு ஹிம்ஸையுண்டாகுமோ அவ்வளவு ஹிம்ஸை இப்பனிவாடையிறுலுண்டாகின்றதென்கை. விரஹிகளுக்குக் குளிர்காற்று பாதகமென்க. எலும்பின் ஸ்தானத்திலே தூர்து விடுந்தனது சரீரமும். நூலின் ஸ்தானத்திலே குளிர் காற்றும் ஆகும், இதனுல் இப்போது தனது சரீரம் எலும்பும் நரம்புமேயாம்படி மிக மெலிந்து போயிற்றென்பதும் ஸூசிதமாகும். (68)

69. *தேனும் பாலும் நெய்யும் கன்னலும்முது மொத்தே.*

திருவாய்மொழி இரண்டாம் பத்தில் மூன்றும் பதிகம் முதற் பாட்டில் ஆழ்வார் எம்பெருமானும் தாமும் கலந்தபடிக்கு ஓர் உபமானம் கூறினர் *தேனும் பாலும் நெய்யுங் கன்னலுமமுது மொத்தே* என்று. தேனும் தேனும் கலந்தாற்போலவும், பாலும் பாலும் கலந்தாற்போலவும்......அமுதும் அமுதும் கலந்தாற்போலவும்—என்று கொண்டு ஏகஜாதிய த்ரவ்யங்கள் பரஸ்பரம் கலந்தாற்போலே என்று முன்புள்ள முதலிகளின் நிர்வாஹம். எம்பெருமானர் நிர்வஹிப்பதாவது—தேன்பால் நெய் கன்னல் அமுது ஆகிய இவற்றைச் சொன்னது மற்றுமுள்ள ரஸவத் பதார்த்தங்களனைத்தையும் சொன்னபடியாய் அவனும் நானுமான கலவிக்குள்ளே எல்லா ரஸங்களுமாம்படி கலந்தோமென்று. ... ... (69)

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

70. *ஆவிசேருயிரினுள்ளாலாது மோர் பற்றிலாத பாவனே.*

மூன்றும் பத்து நான்காம்பதிகம் (10) *யாவையும் யவருந்தானுய்* என்கிற பாட்டில் "ஆவிசேருயிரிலுள்ளாலாது மோர் பற்றிலாத பாவனையதனைக்கூடில் அவனையுங் கூடலாமே" என்கிற பின்னடிகட்குப் பலவாறு பொருள் கொள்ள இடமுண்டாயினும் எம்பெருமானுர் ஆதரித்தருளின பொருள் ஒன்றே. உடலுக்குள்ளேயிருக்கிற உயிர்கட்கு அந்த உடலைச் சார்ந்த இளமை நரை திரை மூப்பு முதலிய வேறுபாடுகள் தட்டுவதில்லை யென்கிற எண்ணம் மனத்திற் படுமாயின் [இதேபோல] எம்பெருமான் சேதநா சேதனங்களோடு கலந்திருந்தாலும் அவற்றின் விகாரம் எம்பெருமானுக்குத் தட்டா தென்பதும் மனத்திற் பதியும்—என்பதே. ஆகவே இது உபமானமாக அமைந்த வாக்கியமென்றுணர்க. ... ... (70)

71. *விழுமியவமரர் முனிவர் விழுங்குங் கன்னல் கனியினே.*

மூன்றும்பத்தில் ஆறுந்திருவாய்மொழியில். (7.) *விழுமியவமரர் முனிவர் விழுங்குங் கன்னற்கனியினை* என்ற மூன்றுமடியில் உவமவுருபு ஒன்றுமில்லையாயினும் இது அபூதோபமையாகத் திருவுள்ளம்பற்றி யருளிச்செய்ததாம். மாங்கனி பலவின்கனி யென்னுமாபோலே கன்னற்கனி யென்று ஒரு கனி கிடையாது. கன்னலென்பது அக்காரக்கட்டி; அதைச் செடியின் ஸ்தானத்திலேயாக்கி அதினின்று பழுத்தபழம் ஒன்று இருக்குமானுல் அது எவ்வளவு போக்யமாயிருக்குமோ அவ்வளவு போக்யன் எம்பெருமான் என்றவாறு. அக்காரக்கனி யென்று வழங்கும் திருநாமத்திலும் இத்தகைய பொருளே விவரிக்கத் தக்கது. ... ... (71)

72. *ஆவாரார் துணையென்று அலைநீர்க் கடலுளழுந்தும் நாவாய் போல்.*

ஐந்தாம் பத்தில் *கையார்சக்கரப் பதிகத்தில் (9ல்) ஆழ்வார் பிறவிக் கடலுள் நின்று துளங்குகின்ற தமக்கு அலைநீர்க் கடலுளழுந்தும் நாவாயை உவமை கூறுகின்றார். நாவாயாவது மரக்கலம் (கப்பல்); அசேதனமான மரக்கலமானது ஆவாரார் துணையென்று பேசுமோவென்று சங்கை தோன்றும்; இதற்கு இருவகையான பரிஹார முணர்க. *மஞ்சா: க்ரோசந்தி* என்று வடநூலார் காட்டு முதாஹரணத்தின்படியே இலக்கணையால் மரக்கலத்திலுள்ளாரைப் பொருளாகக் கொள்ளுமிடத்து எளிதாகப் பொருந்தும். அன்றிக்கே, கரையிலுள்ளவர்கள் ஆவாரார் துணையென்று கதறும்படியாக ஒரு கப்பல் கடலினுள்ளே அழுந்துமாபோலே-என்றுங்கொள்ளலாம். இப்பொருளில் துணையென்று என்றவிடத்து எச்சத்திரிபு; (துணையென்ன) என்றவாறு. ... ... (72)

73. *கறந்த பாலுள் நெய்யேபோல்*

எட்டாம் பத்தில் (5) *மாயக் கூத்தன் பதிகத்தில் (10) *பிறந்த மாயா பாசுரத்தில் "கறந்த பாலுள் நெய்யேபோல் இவற்றுளெங்கும் கண்டுகோள் இறந்து நின்ற பெரு மாயா! உன்னையெங்கே காண்கேனேன்கிறர். முன்னடிகளின் கருத்தை முன்னம் தெரிந்துகொள்ளவேணும்; எம்பெருமானே! நீ பிறந்து கண்ணுக்குப் புலப்படுகிற வனுயிருக்கச் செய்தேயும் பஞ்ச பூதங்கள் முதலியவற்றில் அநுப்ரவேசித்திருந்து கண்ணுக்குப் புலப்படாமலுமிருக்கிறுயென்று முன்னடிகளிற் கூறினர். கண்ணுக்குப் புலப்படாதிருக்கும்போது அவற்றினுள்ளேயிருப்பதாக எப்படி தெரிந்துகொள்வதென்ன; அதற்கிந்தத்ருஷ்டாந்த மருளிச்செய்கிறர் *கறந்த பாலுள் நெய்யேபோல்* என்று. *க்ருதமிவ பயஸி நிகூடம்* என்று ப்ரஹ்ம விதுபநிஷத்திற்கூறியதை அடியொற்றியருளிச் செய்தபடி. பாலைக் கடைந்து வெண்ணெயாக்கி நெய்யாக்குகிறோம். பாலில் நெய் தென்படவில்லையென்பதனுல் பாலில் நெய் இல்லையென்னப் போகாதே. அதுபோல

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வென்கை. இப்பாட்டில் மூன்றுமடியின் முடிவில் கண்டுகொள் என்கிற பாடம் தவறு; கண்டுகோள் என்னவேணும். கண்டுகொள்ளுகையில்லாத என்று பொருள். ... (73)

74. நாய் கூழைவாலால் குழைக்கின்றதுபோல என்னுள்ளங்குழையும்.

ஒன்பதாம் பத்தில் (4) *மையார் கருங்கண்ணிப் பதிகத்தில் (3) *அழைக்கின்ற வடி நாயேன் நாய் கூழைவாலால்,* என்று ஓர் அபூர்வத்ருஷ்டாந்தமிட்டுப் பேசுகிறார். இங்கு ஆழ்வார் கூறுவதாவது, என்னுடைய தன்மையை நான் நன்கறியாதவனல்லேன், அறிந்துள்ளேன். நீசனேன் நிறையொன்று மிலேனான நான் உன்னைக் கிட்டினால் உனக்கு அவத்யமாகுமென்பதை அறிந்தேயிருக்கின்றேன். ஆனாலும் ருசி வெறுமனிருக்க வொட்டாமையாலே ஆர்த்தியாலே கூப்பிடா நின்றேன். உலகில் நாயானது தன் தலைவனுக்குத் தன் ஆவலைத் தெரிவிப்பது தன் வாலினாலன்றோ. அந்த வால் குட்டையானால் தெரிவிக்கை அரிதாம். ஐயோ தெரிவிக்க முடியவில்லையேயென்று நோவுபட்டுக் கிடக்கும். அதுபோல என்னுள்ளமும் நோவுபட்டுக் கிடக்கின்றதென்பதாம். இங்குக் காட்டின உவமையால் இரண்டு வகையான கருத்துத் தேறும். ஆழ்வாருடைய திருவுள்ளத்திலோடுகிறகிலேசம் வாய்விட்டுத் தெரிவிக்க முடியாதது என்பதொன்று. நாய் ஸாதனமில்லாமல் கிலேசப்படுவதுபோலத் தாமும் ஒரு வகையான ஸாதனமுமின்றியே கிலேசிப்பதாகச் சொல்லுவது மற்றொன்று. ... (74)

75. *தீரவிரும்புண்ட நீரதுபோல.

பத்தாம்பத்து பத்தாவது பதிகம் (5) *போரவிட்டிட்டென்னை* என்னும் பாட்டில் *தீர விரும்புண்ட நீரதுபோல என்னாருயிரை ஆரப்பருக, எனக்காரா வமுதானாயே* என்பன பின்னடிகள். பழுக்கக் காய்ச்சின இரும்பானது காய்ச்சல் தீர நீரை நிச்சேஷமாகப் பருகுமாபோலே என் ஆத்மவஸ்துவைப் பரிபூர்த்தியாக புஜிப்பதற்காகவன்றோ எனக்கு உன்னுடைய போக்யதையைக் காட்டி என்னை அகப்படுத்தினாய் என்றபடி. அன்றியே 'என்னாருயிரை' என்றவிடத்து ஐகாரத்தைத் தள்ளி [என்னாருயிர் என்றுமுதல் வேற்றுமையாகக்கொண்டு] என்னாருயிரானது உன்னை ஆரப்பருகும் படியாக எனக்கு நீ பரமபோக்யனானவனல்லையோ? என்று முரைப்பர். ... (75)

76. *நீலவரை இரண்டு பிறை கவ்வி நிமிர்ந்ததொப்ப*

திருவாய்மொழி பத்தாம்பத்து—பத்தாம் பதிகம் (7) *கோலமலர்ப் பாவைக்கன் பாகிய பாசுரத்தில் "நீலவரை இரண்டு பிறை கவ்வி நிமிர்ந்ததொப்பக் கோலவராகமொன்றாய்" என்றுள்ளது. 'இரண்டு பிறை கவ்வி நீலவரை நிமிர்ந்ததொப்ப' என்று அந்வயிப்பது. ஓர் அஞ்சன மலையானது இரண்டு பிறைகளைக் கவ்விக் கொண்டு நிமிர்ந்தாற்போலே கோலவராகமாகி நிலத்தை எயிற்றிடையிலே கொண்ட பெருமானே! என்றபடி. நீல மணி பர்வதத்தின் ஸ்தானத்திலே கோலவராகமும் இரண்டு பிறைகளின் ஸ்தானத்திலே இரு கோரப் பற்களும் கொள்க. கோரப் பற்களிலே ஏந்திக்கொண்ட நிலத்திற்கு ஓர் உபமானம் சொல்லப்படாதது ஏனென்னில், பூமி தனிப்பட ஒரு வஸ்துவாகவே தெரியாமலிருந்தமைதான் இங்குத் தெரிவிக்கப்படுகிறது. "பிறையில் மறுவோபாதியாய்த்து திருவெயிற்றில் கிடந்த பூமி" என்ற ஈட்டு ஸ்ரீஸூக்தியின் சுவையறிக. பிரளயங்கொண்ட பூமியை அண்ட பித்தியிலே புக்கு எயிற்றிலே கொண்டெடுத்தாப்போலே ஸம்ஸாரப்ரளயங்கொண்ட என்னையெடுத்தவனே! என்பது இவ்விடத்து உள்ளுறை பொருள். ... ... (76)

ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் எழுதிய
அருளிச்செயலுவமையெழுபத்தாறு முற்றுப்பெற்றது.

http://acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.